விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 ஏடு 32 ஜுல்ஹஜ் 28 இதழ் 187
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 16-8-1985

★ இலங்கை இனப்பிரச்னை

## நல்ல தீர்வு ஏற்படும்: ராஜீவ் நம்பிக்கை

(புதுடில்லி)

''பஞ்சாப், அஸாம் பிரச்னைகளுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளதுபோன்று, இலங்கை இனப்பிரச்னைக்கும் விரைவில் தீர்வு காணப்படல் வேண்டும் அதன் மூலமே இப்பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள பதற்ற நிலையில் மாற்றமடைய வாய்ப்பு ஏற்படும்'' என்று இந்தியப்பிரதமர் திரு ராஜீவ் காந்தி தெரிவித்துள்ளார்.

இந்திய சுதந்திர தினத்தை யொட்டி டில்லி செங்கோட்டை சதுக்கத்தில் நேற்று உரையாற்றும் பொழுதே திரு ராஜீவ்காந்தி இவ்வாறு கூறினார்.

தொடர்ந்து அங்கு உரையாற்றிய பிரதமர்; ''இலங்கை அரசு தரப்பினருக்கும், தமிழர் பிரதிநிதிகளுக்குமிடையில் பூட்டான் தலைநகர் திம்புவில் நடைபெற்றுவரும் பேச்சுவார்த்தைகள் மூலம் இலங்கை இனப்பிரச்னைக்கு நல்லதொரு தீர்வு ஏற்படும்'' என்று நம்பிக்கை தெரிவித்தார். (ரா)

(3ம் பக்கமும் பார்க்க)

# திருமலையிலிருந்து சிங்களமக்கள் வெளியேற்றம்

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள பதற்றநிலை காரணமாக அங்குள்ள சிங்களமக்கள் பெருமளவில் வெளியேறி வருகிறார்கள்.

திருகோணமலை பொலிஸ் நிலையம் மீது நேற்று அதிகாலை தீவிரவாதிகள் கைக்குண்டுகள் வீசினார்கள் என்று பொலிஸ் தலைமையகத்துக்கு தகவல் கிடைத்துள்ளது. பொலிசார் துப்பாக்கிப்பிரயோகம் செய்ய ஆரம்பித்ததும், ஆயுதம் தாங்கிய 8 தீவிரவாதிகள் தப்பி ஓடியுள்ளார்கள் என்றும் மேற்படி தகவல் தெரிவித்தது.

திருமலையில் நேற்று நடந்த மற்றும் ஒரு சம்பவத்தில், திருகோணமலைக்கு சென்றுகொண்டிருந்த தனியார் பஸ் வண்டி ஒன்று சில பிரயாணிகளுடன் இனந் தெரியாதவர்களினால் திசை திருடப்பட்டுள்ளது.

திருகோணமலை மாவட்டத்திலுள்ள ப. நோ. கூ. சங்க

(8ம் பக்கம் பார்க்க)

## சமரசப் பேச்சுவார்த்தை காலக்கெடு?

(சென்னையிலிருந்து நமது சிறப்பு நிருபர்)

திம்பு பேச்சுவார்த்தையில் நம்பிக்கை இழந்துவரும் தமிழர் பிரதிநிதிகள் காலக்கெடு ஒன்றை விதித்துள்ளனரா?

சென்னைக்குக் கிடைத்திருக்கும் சில தகவல்கள் இதனை ஊர்ஜிதப்படுத்தியுள்ளது

காலக்கெடுவில் தமிழ்ப் போராளிகள் அதிக அக்கறை கொண்டிருப்பதாகவும், திம்பு பேச்சுக்களில் அதிருப்தி கொண்டுள்ள இவர்கள் தங்களது முடிவை இந்திய அரசுக்கு சூசகமாகத் தெரிவித்திருப்பதாகவும் மேற்படி தகவல்கள் தெரிவித்தன.

## அடகுவைத்தவர் வழக்கு தாக்கல்?

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கிக்கிளையில் அடகு வைத்தவர்களில் ஒரு

(8-ம் பக்கம் பார்க்க)

## முருங்கன் ராணுவமுகாம்மீது திடீர் தாக்குதல்

[மன்னார்]

மன்னாரிலுள்ள முருங்கன் இராணுவ முகாம் மீது தமிழ்த் தீவிரவாதிகள் நேற்று அதிகாலை மேற்கொண்ட தாக்குதல் முறியடிக்கப்பட்டதாக அரசு அறிவித்துள்ளது

தீவிரவாதிகள் கைக்குண்டுகளை எறிந்து தங்கள் தாக்குதலை நடத்தினராம்.

முகாமிலிருந்த இராணுவ வீரர்கள் பதிலுக்குத் துப்பாக்கித் தாக்குதலை மேற்கொண்டதும் தீவிரவாதிகள் தப்பி ஓடியுள்ளதாக அரசு தரப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது [ச]

## பயிற்சி பெற்றவர்கள் இங்கு வந்துவிட்டனராம்

(கொழும்பு)

தமிழ்த்தீவிரவாதிகள் இனி மேல் இளைஞர்களை இந்தியாவிற்குப் பயிற்சிக்கு அனுப்ப மாட்டார்கள் என்று பாதுகாப்பு புலனாய்வுப் பிரிவிற்குத் தகவல் கிடைத்துள்ளது.

பயிற்சி பெற்றவர்கள் போதியளவு இங்குவந்து இருக்கிறார்கள் என்ற தகவலும் புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்துள்ளது. (பெ)

## முல்கிரிகல இடைத்தேர்தல்

(முல்கிரிகல)

முல்கிரிகல இடைத்தேர்தல் அடுத்த மாதம் 12-ம் திகதி நடைபெறவுள்ளது.

(8-ம் பக்கம் பார்க்க)

## திம்பு: பேச்சுவார்த்தை நேற்று நடக்கவில்லை

(திம்பு)

இலங்கை இனப்பிரச்னை குறித்து பூட்டான் தலைநகர் திம்புவில் நடைபெற்றுவரும் இரண்டாவது சுற்றுப் பேச்சுவார்த்தைகளில் ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டையைத் தொடர்

(8-ம் பக்கம் பார்க்க)

## தபாலட்டைத் தகவல்

(சுழிபுரம்)

இனந் தெரியாதவர்களினால் கடத்திச்செல்லப்பட்ட திரு.

(8ம் பக்கம் பார்க்க)

# வீட்டுடன் வைத்து மூவர் உயிருடன் எரிக்கப்பட்டனர்

(வவனியா)

பாவற்குளத்தில் நேற்றுமுன் தினமிரவு மூன்று தமிழர்கள் வீட்டோடு வைத்து உயிருடன் எரிக்கப்பட்டார்கள்!

பாவற்குளம் 10-ம் யூனிட்டுக்குச் சென்ற ஆயுதப்படையினர், அப்பகுதியில் சோதனை நடத்தியபோது இச்சம்பவம் நடந்ததாகக் கூறப்படுகிறது.

மாணிக்கம், தியாகராசா சோமசுந்தரம் சிவபாலன், செல்லையா சத்தியமூர்த்தி ஆகியோரே தீக்கிரையானவர்களாகும்.

தியாகராசா திருமணமானவர் என்றும், மற்றும் இருவரும் இளைஞர்கள் என்றும் கூறப்படுகிறது இவர்களை வீட்டிற்குள் வைத்துப் பின்னர், வீடு தீக்கிரையாக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது (ச)

## ஆயுதத் தொழிற்சாலை கண்டு பிடிப்பு

[கொழும்பு]

வீரகெட்டியா என்ற இடத்தில் ஆயுதத் தொழிற்சாலை ஒன்று பொலிஸாரினால் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது

இத்தொழிற்சாலையில் துப்பாக்கிகளும, உதிரிப்பாகங்களும் கைப்பற்றப்பட்டதுடன் அங்கிருந்த ஒருவர் கைது செய்யப்பட்டார். [பெ]

## மக்கள் வங்கிக் கிளைகள் முன்பாக மறியல் போராட்டம் 5-வது நாளாக நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள மக்கள் வங்கிக் கிளைகளில் நேற்று ஐந்தாவது தினமாக அடகு வைத்தவர்கள் மறியல் செய்ததினால் வங்கிகள் நேற்றும் திறக்கப்படவில்லை.

யாழ் நகரிலுள்ள 5 வங்கிக் கிளைகளிலும் நேற்றுக் காலை 7 மணிக்கே மறியல் ஆரம்பமானது.

நூற்றுக்கு மேற்பட்ட பெண்கள் வங்கி வாசலில் சுலோக

(8-ம் பக்கம் பார்க்க)

## வங்கி ஊழியர் இருவர் விளக்கமறியலில்

(கொழும்பு)

வங்கி ஊழியர் சங்கத்தைச் சேர்ந்த இருவர் இம்மாதம் 19-ம் திகதிவரை நிமாண்டில் (விளக்க மறியலில்) வைக்கப்பட்டுள்ளனர்

இவ்விருவரும் நேற்று

(8-ம் பக்கம் பார்க்க)

## துண்டுப்பிரசுரம், சுவரொட்டி பொலிஸார் கைப்பற்றினர்

(கொழும்பு)

தமிழீழ விடுதலை இராணுவம் (டிரலா) வெளியிட்டுள்ள ஆயிரத்திற்கும் அதிகமான துண்டுப்பிரசுரங்களும், சுவரொட்டிகளும் மாளிகாவத்தை ரெயில்வே வளவினுள் வைத்து பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டது.

காங்கேசன்துறையிலிருந்து கொழும்பு நோக்கி வந்த ரயிலில் இந்தத்துண்டுப் பிரசுரங்கள் கடந்த திங்கட்கிழமை வந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.



வவனியாவில் கடந்த சனிக்கிழமை தலைதூக்கிய வன்செயலின்போது எரியுண்டு தரைமட்டமான சில கட்டடங்களின் காட்சிகள் இவை. வவனியா யாழ் வீதியில் வெறுமனே காட்சிதரும் வியாபாரக் கட்டிடங்களை முதல் படத்திலும், ஹொரவப்பொத்தானை வீதியில் ஒரு நெற்களஞ்சியம் எல்லாவற்றையும் இழந்து தரைமட்டமாகக் காட்சிதருவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

(8-ம் பக்கமும் பார்க்க)

# விளம்பரம்

## விற்பனைக்கு

உஷா குளிர்தசாதனப்பெட்டி 8 ச. அடி புத்தம் புதிய நிலையில் ரூபா 8,000/-. சிசில் குளிர் சாதனப்பெட்டி ஆர் 80 ரூபா 6,000/-, ஹொண்டா சி 70 86 சிறி 9900 புதிய மடல் ரூபா 10,500/-, மொறிஸ் மைனர் கார் EL 7000 ரூபா 18,500/-, ஸ்ரீ முருகன்ஸ், 140, கே. கே. எஸ், வீதி, யாழ்ப்பாணம். 74

புதிய G. E. C Air Condition Plant (17000 B.T U.), 45 இரும்புக்கதிரைகள், மினி தியேட்டருக்கு உகந்த T. V. Lens, Hitachi Vedeo Camera (Auto Focus) உடன் விற்பனைக்குண்டு. சாயி ரெவி ரேப், அச்சுவேலி, போன்: 23759. (75

குரும்பசிட்டி பிரதான பஸ் தரிக்கும் சந்தியிலிருந்து தெற்குப்புறமாக 200 யார் தூரத்தில் ரோட்டுக்கு அருகில் மேற்குப் பக்கமாக வீடு கட்டுவதற்கு உகந்த பத்துப் பரப்புக் காணி பிரித்தோ அல்லது முழுமையாகவோ விற்பனைக்குண்டு. தொடர்பு; க. முத்துக்குமாரு, அல்லது வ. குமரேசன், 106, கோயில் வீதி, (கயிலாயபிள்ளையார் கோயிலுக்கு அருகாமை) நல்லூர், யாழ்ப்பாணம். 19

புதிய 'எலெக்ரோனிக் ரிதம் ஓகன்' (பழகுபவர்களுக்கு மிகவும் உகந்தது.) உடன் விற்பனைக்குண்டு. விலை 6000/ ரஞ்ஜனுஸ் வீடியோ சென்ரர், 'கமல்', 92, பழம் ரோட், கந்தர்மடம். 78

மினி சினிமாவுக்கு உரிய 45 பைப் கதிரைகள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு:- செ. கோபாலு, மெயின்வீதி, சங்கானை. 57

## தேவை

கார் பொடி வேலை செய்யக் கூடிய காஸ் சிலின்டருடன் வீட்டில் வந்து வேலைசெயக் கூடிய ரின்கர்(Tinker) தேவை. தொடர்புகொள்ளவும்: ஸ்ரீநிவாசன், மருதனமடம் 77

## தவறிவிட்டது

இல: 615432768 V அடையாள அட்டை தவறிவிட்டது: கண்டெடுத்தவர்கள் கீழ்க் குறிப்பிட்டிருக்கும் விலாசத்தில் ஒப்படைக்கவும்; தகுந்த சன்மானம் வழங்கப்படும்; உப தபால் அதிபர், சுருவில், ஊர்காவற்றுறை: 70

## மணப்பந்தல்

கலைக்கல்வியிற் சிறந்த ரூபா 2,000/- சொந்த வருமானமுள்ள யாழ். சைவவேளாள இன மகளுக்குப் பெற்ரோர் பொருத்தமான 33 வயதுக்கும் 38 வயதுக்கும் உட்பட்ட வரன் தேடுகின்றனர். கணக்காளர், டாக்டர், பொறியியலாளர், விரிவுரையாளர், விஞ்ஞானப்பட்டதாரி விரும்பத்தக்கது. சைவ உணவு நன்று. விளம்பர இல. 76, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 76

Uduvil Girls College

COMPUTER PROGRAMMING and DATA PROCESSING (In Basic Language)

20-8-1985 இற்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

30 மணிக்கு மேற்பட்ட செய்முறை நேரம்.

ஆரம்பம்: 3-9-1985. (66)

## விசேஷ திருவிழா

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி முத்துமாரி அம்பாள் கோவிலில் ஆடிக் கடைசி வெள்ளியான இன்று விசேஷ திருவிழா நடைபெறவுள்ளது. அன்று பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும் விசேஷ பூசையைத் தொடர்ந்து அம்பாளுக்கு மஞ்சள் காப்பு அர்ச்சனை நடைபெறும்.

பஜனைகள் மற்றும் விசேஷ நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

## இடிந்து விழும் நிலையில் கட்டடம்

(இறுப்பிட்டி)

புங்குடுதீவு மகா வித்தியாலயத்தில் ஆறு வகுப்பு பிரிவுகளை உள்ளடக்கி இயங்கும் பழைய கட்டடம் ஒன்று இடிந்து விழும் நிலையில் உள்ளது.

## கவிதை நூல்

(யாழ்ப்பாணம்)

'நல்லூரான் திருவடியை நம்பு' என்னும் தலைப்பிலான கவிதைத்தொகுதி எதிர்வரும் நல்லைக்கந்தன் தேர்த்திருவிழா தினத்தன்று வெளியிடுவதற்கான முயற்சி மேற்கொள்ளப் பட்டுள்ளது. வண்ணைக் கவிஞர் இம்முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

## பேராதனைப் பல்கலைக்கழக வெளிநிலைப் பரீட்சைகள்

G. A. Q., B. A. வகுப்புகள்

பொருளியல்

S. வரதராஜன் B. A. (HONS.)

ஆரம்பம்: 18-8-85 ஞாயிறு 1-30 P. M.

விபரங்களுக்கு:

200, பிரதான வீதி,

கண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

(சென். ஜோன்ஸ் கல்லூரி அருகாமையில்)

45

## நினைவஞ்சலி 16-8-1985



ஈராண்டு

**ந. நவரத்தினராசா**

T. O, கட்டிடப் பகுதி, கண்டி;

படைப்பு: 5-6-1953

அழிப்பு: 27-7-1983



ஓராண்டு

**செல்வி ந. ருக்மணி**

மலர்வு: 9-4-1962

உதிர்வு: 28-7-1984

அன்பு மிகும் உன்னுடனை அரக்கர்கள் அழித்த பின்பு தனித்திருக்க மாட்டாமலோ தங்கையையும் அழைத்துச் சென்றாய்.

அன்போடும் பண்போடும் எம்மோடு இணைந்திருந்த உங்கள் பிரிவால் கலங்கித் தவிக்கும் அதே வேளையில் உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

பெற்றோர், உடன் பிறப்புக்கள்:

வரிக்காடு, முள்ளியான், பளை. (15)

## 31ம் நாள் நினைவஞ்சலி

(18-8-85)

**செல்வி சிவாஜினி கனகராஜா**

(நெல்லியடி மத்திய மகாவித்தியாலய பழைய மாணவி)

பிறப்பு: 18-11-1955 இறப்பு: 19-07-1985



ஆழ்த்துயரில் ஆழ்த்தி மீளாத்துயில் கொண்ட எமது அன்பு மகளின் ஆத்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகின்றோம். அனுதாபச் செய்திகள் அனுப்பியும், நேரில் வருகை தந்தும் எமது துயரத்தில் பங்கு கொண்ட அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

''சாயி கொட்'' கனகராஜா குடும்பத்தினர்.

கரவி வடக்கு, வட்டுக்கோட்டை: 71

## யாழ். அபிவிருத்திச் சபை

# அறிவித்தல்

1985-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 09-ம் திகதி காலை 10-00 மணிவரை யாழ்: அபிவிருத்திச் சபை பிரதிச் செயலாளர் (நிர்வாகம், சட்டம், வேலை) அவர்களால் கீழே காட்டப்பட்ட வேலைகளுக்கு, பெருந்தெருக்கள் திணைக்களம், கட்டடத் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம் மற்றும் அரசாங்கத் திணைக்களங்கள்/கூட்டுத்தாபனங்களில் கீழ்க் காட்டப்பட்ட வேலைகளின் எதிரே காட்டப்பட்ட தொகைக்கு மேற்பட்ட தொகைக்குப் பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து சீல்வைத்த கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும். அன்றையதினம் காலை 10-10 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அத்தருணம் ஒப்பந்தக்காரரோ அல்லது அவர்களின் பிரதிநிதிகளோ சமுகமளிக்கலாம்.

கேள்விக்காரர் வைப்புப் பணத்தையும் கிரயப் பணத்தையும் சம்பந்தப்பட்ட யாழ்: அபிவிருத்திச்சபை உப அலுவலகத்தில் செலுத்துவதன் பெயரில் 1985-ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 02-ம் திகதி நண்பகல் 12-00 மணிவரை சம்பந்தப்பட்ட உப அலுவலகங்களில் கேள்விப் பத்திரங்கள் பெற்றுக்கொள்ளலாம்;

| | யாழ். அபிவிருத்திச்சபை உப அலுவலகங்கள் | வேலையின் பெயர் | ஒப்பந்தக்காரர் பதிவுசெய்யப்பட்ட தொகை (தகமை) | வைப்புப் பணம் | கிரயப் பணம் |
|---|---|---|---|---|---|
| (01) | நாரந்தனை | புளியங்கூடல் சந்தைக் கட்டடம் அமைத்தல் | 50,000/- | 50/- | 25/- |
| (02) | சுன்னாகம் | கொல்களம் அமைத்தலும் அதைச்சுற்றி சுவர் கட்டுதலும் | 50,000/- | 50/- | 25/- |
| (03) | செம்பியன்பற்று | நூல் நிலையக் கட்டடம் அமைத்தல் | 50,000/- | 50/- | 25/- |
| (04) | கிளிநொச்சி | நூல் நிலையக் கட்டடம் அமைத்தல் | 150,000/- | 75/- | 50/- |
| (05) | கொக்குவில் | நூல் நிலையம் அமைத்தல் | 125,000/- | 125/- | 25/- |
| (06) | கொக்குவில் | ஆடியபாதம் சந்தை அமைத்தல் | 40,000/- | 50/- | 25/- |
| (07) | நல்லூர் | நல்லூர் உப அலுவலகம் அமைத்தல் | 250,000/- | 200/- | 50/- |
| (08) | முள்ளிப்பற்று | 2 கடை அமைத்தல் | 30,000/- | 50- | 25/- |
| (09) | கச்சாய் | கொடிகாமம் சந்தைக்கட்டிடம் | 600,000/- | 500/- | 100/- |

அன்ரன் அல்பிரட்

(ஒப்பம்)

பிரதிச் செயலாளர் (நிர்: சட்: வே)

யாழ். அபிவிருத்திச் சபை;

உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம்

கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

12 ஆகஸ்ட், 1985. (64)

# ★ ராஜீவின் சுதந்திரதினச் செய்தி அஸாம் மாநிலப் பிரச்னைக்கும் நேற்று அதிகாலை தீர்வு காணப்பட்டது!



(புதுடில்லி)

**இந்திய அரசாங்கத்துக்குத் தலையிடியைக் கொடுத்துவந்த 'அஸாம் மாநில'ப் பிரச்னைக்கும் தீர்வு எட்டப்பட்டுள்ளது. நேற்று அதிகாலை 2-45 மணியளவில் இந்திய அரசு தரப்புக்கும், அஸாம் கிளர்ச்சியாளர்களுக்குமிடையே இப்பிரச்னை குறித்து உடன்பாடு ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

இந்தியப் பிரதம மந்திரி திரு. ராஜீவ் காந்தி நேற்று இந்திய சுதந்திர தின வைபவ உரையில் இந்த மகிழ்ச்சிகரமான செய்தியை வெளியிட்டார்.

கடந்த நவம்பரில் இந்தியாவின் 6வது பிரதமராகப் பதவியேற்ற திரு. ராஜீவ் காந்தி நேற்று முதற் தடவையாகத் தமது சுதந்திரதின உரையை நிகழ்த்தினார்.

புதுடில்லி செங்கோட்டையில் இந்திய சுதந்திர தின வைபவத்தின் 38-வது வருடப் பூர்த்தியில் தேசியக் கொடியை ஏற்றிவைத்த பின்னர் திரு காந்தி அங்கு உரையாற்றினார்.

பொலிஸ் மோட்டார் வாகனப் பிரிவு வீரர்கள் அணிவகுத்துவர திரு. காந்தி செங்கோட்டையை வந்தடைந்தார். அங்கு இந்தியக் கடற்படையினர் அணிவகுப்பு மரியாதையைச் செலுத்தினர் தொடர்ந்து திரு காந்தி தேசியக் கொடியை ஏற்றிவைத்தார் 21 மரியாதைக் குண்டுகள் இராணுவத்தினரால் தீர்க்கப்பட்டன.

திரு. காந்தி தமது உரையில் அஸாம் மாநிலப் பிரச்னைக்கு நேற்று அதிகாலை தீர்வு காணப்பட்டதையே பிரதானமாகக் குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் பேசியதாவது:-

"இந்தியா அணிசேராக் கொள்கையின் அடிப்படையில் சகல அயல் நாடுகளுடனும் தொடர்புவைத்திருக்கும்.

இந்தியா பஞ்சாப் பிரச்னை உட்பட அதன் உள்நாட்டுப் பிரச்னைகளுக்குத் தீர்வுகண்டுள்ளது. எனவே எதிர்காலத்தில் துரித அபிவிருத்திப் பணிகளில் இந்தியா தன்னைப் பூரணமாக அர்ப்பணிக்கமுடியும்.

இந்தியாவில் 5 வருடங்களுக்கு முன்னர் 49 சதவீதத்தினரைமட்டுமே வறுமைக் கோட்டுக்கு மேலே கொண்டுவர முடிந்தது.

ஆனால் தற்போது 63 சதவீதத்தினர் வறுமைக் கோட்டுக்கு மேல் கொண்டுவரப்பட்டுள்ளனர். வறுமை ஒழிப்பு நடவடிக்கைகள் எதிர்காலத்தில் தீவிரமாக மேற்கொள்ளப்படும்.

இந்தியாவின் வெளிநாட்டு உறவுகள் அணிசேராக் கொள்கையைத் தழுவியவையாகும். அமெரிக்கா - ரஷ்யாவுடனான உறவுகள் கடந்த ஜூன்மாதம் அவற்றுக்கு நான் மேற்கொண்ட விஜயங்களையடுத்து மேலும் இறுக்கமடைந்துள்ளன

இந்தியா அயல்நாடுகளுடன் நெருங்கிய தொடர்புகளை வைத்திருக்கவே விரும்புகிறது. எனவே பாகிஸ்தான் அணுக்குண்டு தயாரிப்பது குறித்த அதன் திட்டத்தை மறுபரிசீலனை செய்யவேண்டும்'' என்றார். (இ)

## கங்கையை சுத்தம்செய்ய உலகவங்கிஉதவி

புதுடில்லி, ஆக 15

கங்கை நதியைச் சுத்தமாக்கும் பணிகளுக்கு உலகவங்கி நிதியுதவி அளிக்க முன்வந்துள்ளது.

உலக வங்கித் தலைவர் திரு. லெவிசன் வாரணாசிக்கு நேற்று விஜயம் செய்திருந்தார் அப்போதே அவர் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

கங்கைநதி அண்மைக்காலங்களில் பல்வேறுபட்ட கழிவுகளினாலும் பெரிதும் மாசடைந்துவருகின்றது. இதனைச் சுத்தம் செய்வதற்கான திட்டங்களை பிரதமர் ராஜீவின் பணிப்பின் கீழ் விசேட குழுவொன்று பரிசீலித்துவருவது குறிப்பிடத்தக்கது.

இந்துக்களின் புனித நதியான 'கங்கை' வட இந்தியாவின் நீர்ப்பாசனத்திலும் பெரும் பங்கு வகிக்கின்றது. (இ)

## தியாகதீபங்களுக்கு அஞ்சலி செய்வோம் —எம். ஜி. ஆர்.

(நியூயோர்க்)

''நாடு விடுதலையடைவதற்கு தங்கள் இன்னுயிர்களை காணிக்கையாக்கியதியாக தீபங்களுக்கு நாம் அஞ்சலி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம்.''

இவ்வாறு இந்திய சுதந்திர தினத்தையொட்டி நியூயோர்க்கிலிருந்து வெளியிட்டுள்ள செய்தியில் தமிழக முதல்வர் திரு எம் ஜி ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

''அமைதி, ஒற்றுமை, முன்னேற்றம் ஆகியவற்றை மூழுமூச்சாகக் கொண்டு நாட்டை உயர்த்த பாடுபடுவோம்'' என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (து)

## விபத்தின் எதிரொலி: ஜப்பான் விமான சேவை தலைவர் ராஜினமா!

டோக்கியோ, ஆக 15

ஜப்பான் விமானச் சேவைத் தலைவர் திரு யஷிமுட்டோ யக்காச்சி நேற்று தமது பதவியை இராஜினமாச் செய்தார்.

ஜப்பானிய 'ஜம்போஜெட்' விமானம் விபத்துக்குள்ளானதையடுத்தே அவர் இம்முடிவை மேற் கொண்டார்

திரு- யக்காச்சிக்கு வயது 73 ஆகும். தமது பணிகளுக்குஇவ் விபத்து களங்கம் ஏற்படுத்தியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அவ்விபத்தில் இறந்தவர்களில் 121 பேரின் சடலங்கள் மட்டுமே மீட்கப்பட்டுள்ளன. இச் சடலங்கள் துணிகளில் சுற்றப்பட்டு ஹெலிகொப்டர்கள் மூலமாக அவ் விபத்து இடம் பெற்ற இடத்துக்கு அருகிலுள்ள விளையாட்டரங் கொன்றுக்குக் கொண்டுவரப்பட்டன.

பின்னர் அங்கு ஆராதனைகள் நடைபெற்ற பின்னர் அவை அடக்கம் செய்யப்பட்டன

இவ் விபத்தில் உயிர்தப்பிய 4பேரில் 29 வயதான ஒட்சிக்கா என்ற விமானப் பணிப்பெண்ணும் ஒருவராவார். விமானம பறந்து கொண்டிருந்த போது அதன் மேற்புறப்பகுதியில் வெடிப்புக்கள் தோன்றும் சத்தம் கேட்டதாகவும் பின்னர் அவர் வெடிப்புக்களூடாக வானத்தைப் பார்க்க முடிந்ததென்றும் மயிர்க்கூச்செறியும் தமது அனுபவத்தை வெளியிட்டார் (இ)

## 16 பேருக்கு கௌரவம்

(சென்னை)

தமிழகத்தில் பொலிஸ் சேவையிலுள்ள 16 பேருக்கு இந்திய சுதந்திர தினமான நேற்று உயர் கௌரவ விருதுகள் வழங்கப்பட்டன.

இந்தப் 16 பேரில் கான்ஸ்டபிள் உட்பட சகல தரப்பிலுள்ள பொலிஸ் அதிகாரிகளும் அடங்குவர்.

இவர்கள் பல்வேறு துறைகளில் ஆற்றிய துணிகரமான சேவையைப் பாராட்டியே இவ் உயர் கௌரவ விருது வழங்கப்பட்டது

# உலகச் செய்திகள்

## ● 1986 ஜனவரிக்குப் பின்னர் பாகிஸ்தானில் இராணுவ ஆட்சி இருக்காது!

### பிரதமர் ஜுனேஜோ அறிவிப்பு

லாகூர், ஆக-15

**"1986ம் ஆண்டு ஜனவரி 3ம் திகதிக்குப் பின்னர் பாகிஸ்தானில் இராணுவ ஆட்சி இருக்காது" என்று பாகிஸ்தான் பிரதமர் மொஹமட் கான் ஜுனேஜோ தெரிவித்துள்ளார்.**

நேற்று லாகூரில் இடம்பெற்ற தமது கட்சியின் பொதுக் கூட்டமொன்றிலேயே அவர் இத்தகவலை வெளியிட்டார்.

பிரதமர் ஜுனேஜோ மேலும் கூறியதாவது:-

''இந்த ஆண்டின் இறுதியில் பாகிஸ்தானிலிருந்து இராணுவச் சட்டம் அகற்றப்படும். 1986ம் ஆண்டு ஜனவரி 3ம் திகதிக்குப் பின்னர் பாகிஸ்தானில இச்சட்டம் அமுலில் இருக்கமாட்டாது.

அதன் பின்னர் தேசிய அமைப்பொன்று பாகிஸ்தானில் எத்தனை எதிர்க் கட்சிகளை அனுமதிப்பது, தேர்தல்களை நடத்துவது என்பதுகுறித்தும், தடைசெய்யப்பட்ட அரசியல் கட்சிகள் குறித்தும் தீர்மானிக்கும்'' என்றார்.

1977ம் ஆண்டு ஜெனரல் ஸியாவுல் ஹக் பாகிஸ்தானில் இராணுவ ஆட்சியைக் கொணடுவந்தார். அதனை நீடிப்பது, அகற்றுவது என்பது குறித்து அவராலேயே உறுதியாகக் கருத்து வெளியிட முடியும்.

ஆனால் பிரதமர் ஜுனேயேவின் இத்தகவல் பாக இராணுவ ஆட்சியாளரின் அனுமதியின் பேரிலேயே நேற்று வெளியிடப்பட்டிருக்கலாமென அரசியல் அவதானிகள் கருதுகின்றனர் ஏனெனில், ஜுனேஜோ பாகிஸ்தானின பிரதமராக அதிபர் ஹக்கினாலேயே நியமிக்கப்பட்டார். எனவே ஜெனரல் ஹக்கின் முடிவுகளையே அவரால் வெளிப்படுத்த முடியும்

இதேவேளை லாகூரில் நேற்று இராணுவ ஆடசிக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களும் இடம் பெற்றன.

பாகிஸ்தானில் இராணுவச் சட்டம் நீக்கப்பட்டாலும் தனது கட்சி மீதான தடை அகற்றப்பட மாட்டாதென்று முன்னாள் பிரதமர் பூட்டோவின் மக்கள் கட்சி தெரிவித்துள்ளது. (இ)

## இந்தியமீனவரைக் காப்பாற்ற நடவடிக்கை எடுக்கவும்'' ராஜீவுக்கு ஜனர்த்தனன் கோரிக்கை

(சென்னை)

இலங்கைக் கடற்படையினால் இந்திய மீனவருக்கு இழைக்கப்பட்டுவரும் கொடுமைகளைத் தடுக்க உடன் நடவடிக்கை எடுக்குமாறு பிரதமர் திரு. ராஜீவ் காந்தியை உலகத் தமிழ் இளைஞர் பேரவைத் தலைவரும தமிழ்நாடு சட்ட மேலவை உறுப்பினருமான திரு. இரா. ஜனர்த்தனன் கேட்டுள்ளார்.

திரு ஜனர்த்தனன் இந்தியப் பிரதமருக்கு விடுத்துள்ள இவ்வேண்டுகோளில் மேலும் தெரிவித்துள்ளதாவது: இந்திய மீனவர்களுக்கு இலங்கைக் கடற்படையினால் ஏற்படுத்தப்பட்டுள்ள இழப்புகளுக்கு இலங்கை அரசாங்கத்திடம் நிவாரணம் நஷ்டஈடுகளைப் பெற்றுக்கொள்ள உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதாகும். (அ)

## தெல்லிப்பழை துர்க்கை அம்பாள் திருவிழா நாளை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை அருள்மிகு துர்க்காதேவி ஆலய மகோற்சவம் நாளை சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது உற்சவம் 12 தினங்கள் நடைபெறும்.

வேட்டைத்திருவிழா 9ம் திருவிழாவான 25ம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் சப்பரத் திருவிழா 26ம் திகதி திங்கட் கிழமையும் தேர்த்திருவிழா 27ம் திகதி செவ்வாய்க்கிழமையும் மறுதினம் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

மகோற்சவ காலத்தில் பணிபுரியும் சாரணத் தொண்டர்களின் தலைவர்கள் கோயில் நிர்வாகத்துடன் தொடர்பு கொளாறும், உள்வீதியில் பணிபுரிவதற்கு தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம் துர்க்கா தேவி பெண்கள் தொண்டர் சபை அனுமதி பெற்ற சமயோகித தொண்டர்கள் மட்டும் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தேவஸ்தானம் அறிவித்துள்ளது.

(7-ம் பக்கம் பார்க்க)

### மணிவாக்கு

இல்லறத்தில் நின்றொளிரும் ஏந்திழை
நல்லா ளொருத்தி
நில்லென்றாள் சூரியனை நேர்
—சிவயோகசுவாமிகள்

# நமது நோக்கு

## மக்கள் பாதுகாப்பு

இந்த நாட்டில் வாழும் மக்களுக்கு இன்று பாதுகாப்பில்லை என்பதை நாட்டை ஆட்சிசெய்து வந்திருக்கும் இரு பெரும் கட்சிகளும் உணரத் தொடங்கிவிட்டன.

இந்தக் 'வோசு' திம்புப் பேச்சுவார்த்தைகள் சரிவரும் என்று ஜனாதிபதி ஜெயவர்த்தன நம்பிக்கை தெரிவித்திருப்பதும் இதனைக் குறிக்கிறது.

சிங்கள மக்களுக்குப் பாதுகாப்பில்லை என்ற கவலையே திருமதி பண்டாரநாயக்காவுக்கும், மைத்திரிபாலா, தினேஷ் — இந்நாட்டின் மார்க்ஸியவாதிகளின் முன்னைநாள் தந்தை பிலிப் குணவர்த்தனவின் மகன் — பிறின்ஸ் குணசேகரா, டாக்டர் நெவில் பெர்னாண்டோ போன்றவர்கள் நேற்று மூன்றினம் நடத்திய ஹர்த்தாலுக்குக் காலாகவிருந்தது.

வடக்கில் அடைமழை நின்றபோதும் தூமி தூமியாக வவனியாவிலும், திருகோணமலையிலும் அதிக முழக்கமின்றிப் போர்மழை பெய்கிறது. இரத்தக்களரியில் உருசிகண்டவர்கள் இலகுவில் அதனை மறக்கமாட்டார்கள்.

இதற்கு முழு மாறாகத் தெற்கில் மக்கள் பாதுகாப்பென்ற குரல் உரம்பெறுகிறது. யார் இந்த மக்கள்? என்பதை ஹர்த்தால் நடத்திய தலைவர்கள் விளக்க வேண்டும்.

நாம் செய்யும் வினை உடனடியாகப் பலன்தராது என்பதை நாமறிவோம். 1983 ஆடி மாதத்தில் மக்களுக்குப் பாதுகாப்பிருந்ததா? ஆம் என்றால் அது சிங்கள மக்களைக் குறிக்கும்; இல்லை என்றால் தமிழ் மக்கள் என்பது அர்த்தம்.

எனவே, பாதுகாப்பு இரு வகைப்பட்டதை நாம் இன்று அறியக்கூடியதாக இருக்கிறது.

இன்னும் ஒரு விசேடம் நாம் குறிப்பிடும் ஹர்த்தால் கற்பிக்கின்றது.

அநுராதபுரச் சம்பவத்தின் பின் பிறந்த ஞானமாக இருக்கலாம். பாதுகாப்புக் கோரும் பெரும்பான்மை மக்கள் ஹர்த்தால் என்ற அமைதியான முறையை அநுட்டிப்பது; இது நல்ல திருப்பம்.

இதுகாறும் ஹர்த்தால்என்றால் அது வடக்கில் கிழக்கில் நடந்துவரும் தமிழ் மக்களின் பலவீனத்தைப் பறைசாற்றும் ஒரு யுக்தி என்று கருதப்பட்டது.

தமிழ்மக்கள் கலவரங்களில் கொல்லப்பட்டபோதும், அவர்களின் உடைமை கொள்ளையடிக்கப்பட்டு, வீடுகள் கொளுத்தப்பட்டபோதும் பல பண்புடைய சிங்களச் சகோதரர்கள் உயிரை மதிக்காது உதவினர். அது வேறு விடயம்.

இன்று ஹர்த்தால் ஒரு புதுமெருகு பெறுவதையும், பௌத்த குருமார் நூற்றுக்கணக்கில் பொதுமக்களோடு சேர்ந்து கோஷம் எழுப்பி சிங்கள மக்களுக்கு பாதுகாப்பு கோருவதும், நாட்டின்பிரச்சினை தேசிய பிரச்சினையென்பதை வற்புறுத்துகிறது.

1983 ஆடியில் இத்தகைய ஹர்த்தால் ஒன்று தமிழ் மக்கள் சார்பில் பண்டாரநாயக்கா அம்மையார் தலைமையில் நடைபெற்றிருந்தால் அதன்பலன் என்னவானாலும் உலகின் முதற் பெண் பிரதமர் உண்மையில் 'தர்மதீபம்' என்று சொல்லப்படும் இலங்கை உலகுக்களித்த பெருந்தலைவி என்று பெருமைக் குரித்தாயிருப்பார்.

இன்று மக்கள் பாதுகாப்பு என்று குறிப்பிடும்போது இந்த நாட்டு மக்கள் சிங்களவர் தமிழர் என்ற வேறுபாட்டால் ஒருவரை ஒருவர் கொலைசெய்வதைக் குறிக்கிறது.

இந்த அபாயம் பெரும்பான்மை சிங்கள மக்களையும்பீடித்திருப்பதால்இன்று மக்கள் பாதுகாப்பு ஒரு பெரும் பிரச்சினையாக உருவெடுத்திருக்கிறது.

இதற்கு வழிகாண இன்று திம்புவில் பேச்சுக்கள் நடைபெறுகின்றன. இவற்றில் வெற்றிகண்டால் மக்கள் பாதுகாப்பு என்ற பிரச்சினைக்கு இடமிராது. ஒருவேளை இதனை அஞ்சித்தானோ நாம் குறிப்பிடும் ஹர்த்தால் நடைபெற்றது.

பாதுகாப்புக்கு முன்னுரிமை உடையவர்கள் இங்கு இன்று வாழும் தமிழ் மக்கள் எவ்வித ஈனமிரக்கமின்றி பலர் கொல்லப்பட்டபின் தப்பி இருப்பவர்கள் அதிர்ஷ்ட தேவதையின் கடைக்கண் பெற்றவர்கள் என்றே நாம் கருதுகிறோம்.

இந்த அட்டூழியம் தாங்க முடியாதகட்டத்தில் எழுந்த தமிழ் இளைஞர் போராட்டம் தமிழரோ சிங்களவரோ எவருக்கும் பாதுகாப்பில்லை என்பதை விளக்க முடிந்தது அதேசமயம் சமாதானத்துக்கு அவர்களின் மனத்தை திருப்பியது.

எனவே இந்த நாட்டின் பொது மக்கள் சார்பில் "கொஞ்சம் பொறுமை காட்டுங்கள்" என்று நாம் இருபகுதியினரையும் கேட்கின்றோம்.

திம்பு பேச்சுவார்த்தைகள் எங்கள் விருப்பு வெறுப்புக்கு கட்டுப்பட்டவை அல்ல: கடந்த ஏ. பீ. சி. பேச்சுவார்த்தைகள் கேலிக்கூத்தென்பதை எவரும் அறிவர்.

இன்று ஆண்டவன் கொலுவிருக்கும் இமயத்தின் சாரவில் நடக்கும் பேச்சுக்கள் பாம்பும் புலியும் இணைந்திருக்கும் பரமேஸ்வரனின் முன்னிலையில் நடைபெறுகின்றன.

எனவே தெற்கில் வாழும் பெருந் தலைவர்களும், வடக்கில் அமைதிக்குப் பொறுப்பான இளந்தலைவர்களும் பொறுமையுடனும்பொறுப்புணர்வுடனும் அமைதி பேணவேண்டும்.

# தீதும் நன்றும் பிறர்தர வாரா

தமிழ் பேசும் மக்களாகிய நாம் மிகுந்த துன்பமும் துயரமும் நிறைந்த காலத்தினூடாகச் சென்றுகொண்டிருக்கின்றோம் இந்த வேளையில்இந்தத் துயரங்கள் எப்படிஏற்பட்டன. ஏன் ஏற்பட்டன போன்ற விடயங்கள் பற்றிச் சிந்தித்தல் மிகுந்த பயனுடையதாயிருக்கும் அதுபற்றிய ஆராய்வும் அதனால் வரும் தெளிவும் நாம் இந்த விரும்பத்தகாதநிலையிலிருந்து விடுபட விடிவுகாணத் தேவையான மனப்பாங்கினைத் தரும்-

சாதாரணமாகவாழ்க்கையில் துன்பங்கள் வரும்போது நாம் பதற்றப்படுகின்றோம். நமது பொறுமையையும் நிதானத்தையும் இழந்து விடுகிறோம், இதன் காரணமாக பல குழறுபடிகளில் ஈடுபடுகிறோம். அந்தத் துன்பங்கள் ஏன் வந்தன. அதற்கு நாம் எவ்வளவு தூரம் பொறுப்பு என்பவற்றையெல்லாம் நாம் ஆராய்வதில்லை. வெகு இலேசாக நம்முடைய துன்பங்களுக்கு நம்மைத் தவிர்ந்த பிறரே காரணம் என முடிவெடுத்துவிடுகிறோம். அங்ஙனம் காரணமாகக் கருதுபவர்களைக் கோபிக்கிறோம், திட்டுகிறோம் விரைந்து அவர்களுக்கு தீமைகள் பல இழைக்கவும் முனைகிறோம். இதனால் நம்மையே தாழ்த்திக் கொள்கிறோம். தொடர்ந்தும் துன்பங்களும் துயரங்களும் நம்மைச் சூழ்ந்துகொள்ள வழி வகுக்கிறோம்.

### பொது உண்மை

நாம் வேறுபட்ட சமயங்களைப் பின்பற்றுபவர்களாக இருக்கலாம். எனினும் எல்லாச் சமயங்களிலும் எவ்வித கருத்து வேறுபாடுமின்றி இந்த உண்மை ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. அதாவது நமக்கு வரும் இன்பதுன்பங்கள் எல்லாவற்றுக்கும் நாமே பொறுப்பு, நமது செயல்களின் விளைவாகவே அவை வருகின்றன. 'முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்' என்பது நம் நாட்டுப் பழமொழி. நம் தெய்வப்புலமைத் திருவள்ளுவரும்,

பிறர்க்கு இன்னா முற்பகல்
செய்யின் தமக்கு இன்னா
பிற்பகல் தாமே வரும்.
நோய் எல்லாம் நோய்செய்
தார் மேலவாம் நோய்
செய்யார் நோயின்மை
வேண்டுபவர்.

எனக் கூறியுள்ளமையும் நோக்கத் தக்கது 'நோய் எல்லாம் நோய்செய்தார் மேலவாம்' என வள்ளுவப் பெருந்தகை அறுதியிட்டுக் கூறினார்.

ஒரு மேலான பரம்பொருள் சக்தி இந்த உலகை இயக்கிக் கொண்டிருக்கிறது என்பதே எல்லாச் சமயங்களின் அடிநாதமாகிய கொள்கையாகும். அந்தச் சக்தி அவரவர் செய்கைகளுக்கு ஏற்ப அவரவர்க்குரிய பலனை விளைவிக்கிறது. அந்த மேலான சக்தியின் கருணை மிகுந்த கண்காணிப்பின் கீழேயே நம்மெல்லோருடையவாழ்க்கையும் நடைபெறுகிறது. அந்தச் சக்தியை நாம் நமது சமயவேறுபாடுகளுக்கேற்ப வேறுபட்ட பெயர் கொடுத்து அழைக்கலாம் எனினும் அந்தச் சக்தி நம்மிடையே எவ்வித வேறுபாடும் காட்டாமல் தன்பணியைச் செய்கிறது. அதனாலேயே இந்த உலகில் ஓர் ஒழுங்கு நிலவுகிறது நாத்திகர்கள், பகுத்தறிவு வாதிகள், போன்றோர், உலகில் எல்லாம் குழப்பமாக இருக்கின்றதெனலாம். ஆனால் உற்றுக்கேட்போருக்கு, உய்த்துணரவல்லார்க்கு அழகான ஒழுங்கு இருப்பது தெரியும்.

### — மகரம் —

பிரபஞ்ச அமைப்பின் நுட்பங்களை ஆராய்ந்தறிந்த அல்பேர்ட் ஐன்ஸ்ரைன் போன்ற விஞ்ஞான மேதைகள் இறைவனின் படைப்பிலுள்ள ஒழுங்கை மெச்சி வியந்துள்ளனர் எனவேதான் நாம்படும்துன்பங்களிற்கும் துயரங்களுக்கும் நமது செயல்கள்தான் காரணம். வேறொருவர் திட்டத்தினால் அவை நம்மீது சுமத்தப்பட்டவையென்பது பேதமை எனவேதான் நாம் சிறிது நிதானத்துடன் சிந்திக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

### அதர்மம்

தனிப்பட்ட மனிதர்களைப் பொறுத்தமட்டில் இவையெல்லாம் சரியாகவிருக்கலாம் ஆனால் ஒரு மக்கள் சமூகத்தைப் பொறுத்தமட்டில் அதாவது தமிழ்ப்பேசும் மக்களைப் பொறுத்தமட்டில், இங்ஙனம் கருதுவது பிழையானதென நம்மில் பலர் நினைக்கலாம். ஆனால் அது அங்ஙனமன்று. மனித குலத்தின் வரலாற்றை அறிந்தோர் இவ்வுண்மையை ஏற்றுக் கொள்ளவே செய்வர், ஏனெனில் நமது கூட்டு மொத்தமான செயல்களின் விளைவே நாமெல்லோரும் அனுபவிக்கும் துன்பங்கள் துயரங்களாகும். வரலாற்றில் சிறப்பாக வாழ்ந்த இனம் தவறான வழிகளில் செல்லும் போது அதன் வீழ்ச்சி தொடங்குவதைக் காணலாம். ரோமப் பேரரசின் வீழ்ச்சிக்குக் காரணம் அம்மக்கள் அளவுக்கு மிஞ்சிய கேளிக்கைகளில் ஈடுபட்டமையே உயர்ந்த இலட்சியங்களை விட்டு விலகியபோது ஒழுக்கக்கேடாக வாழத்தொடங்கியபோது நாகரிகங்களின் வீழ்ச்சி ஆரம்பமாகி விடுகின்றன. உலக நாகரிகங்களையெல்லாம் ஆராய்ந்து புகழ்பெற்ற வரலாற்றாசிரியர் பேராசிரியர் ஆர்னோல்ட் ரொயின்பீ (Prof. Arnold Toynbee) அவர்களும் இக்கருத்தையே வலியுறுத்தியுள்ளார்.

பழைய உதாரணங்களை விட்டு அண்மைக்காலத்தில் வாழ்ந்த மகாத்மா காந்தி கூறு

(5ம் பக்கம் பார்க்க)

# சிறப்பும் சிறுமையும்

உலகில் உள்ள எந்தவொரு சமயத்தையும் இகழாது—பிற சமயத்தவனை அந்தசமயத்திலேயே விசுவாசமாகவாழும்படி அநுமதிக்கும் சமயம் சைவசமயமாகும்.

சைவசமயத்தவர் உண்மைச் சமயியாய்— சமய அபிமானம் முதலியன உடையவர்களாய் வாழவேண்டும் என்றே சமயாச்சாரியர்கள் நாவலர்பெருமான்போன்றோர் பலகருமங்களில் ஈடுபட்டனர்.

சைவசமயத்தவர் பிறமதத்திற்கு மாறலாகாது எனப் பாடுபட்ட நாவலர்பெருமான் உலகிலே கிறீஸ்தவசமயம் என்றொரு சமயம் இருப்பதை மதித்ததாலேயே— விரும்பியதாலேயே பைபிளை மொழிபெயர்த்து உதவினார்.

சிவ பூமியாக— சைவசமயம் விளக்கமாக வழங்கும் நாட்டிலே சைவசமயத்தை இகழ்ந்தது மட்டுமன்றி சைவசமயத்திலும் உள்ள சிறப்புகள் இல்லாததாயும்விளங்கிய காரணத்தாலேயே ஞானசம்பந்தர் சமணத்தையும் பௌத்தத்தையும் கண்டிக்க நேரிட்டது.

நம் நாட்டுச் சரித்திரம் சமய வரலாறு என்பன தெரியாத பலர் நாவலர் ஞானசம்பந்தர் போன்றோரைச் சமயத்துவேஷம் மிக்கவர்கள் என்று கருதுகின்றனர்.

ஒருவனைப் பார்த்து உன் சமயம் சிறப்பானதன்று; என் சமயத்துக்கு வந்துவிடு என்று கேட்பதைச் சமய அபிமானம் எனக் கருதலாகாது. இப்படியான தன்மையைச் சமய வெறியென்றே சொல்லலாம்.

சமய வெறியாகிய அநாகரீகத்தன்மையிலும் பார்க்க ஒருவன் சமயம் மாறுவதும், தன் சமயத்தைப் பிறசமயி ஒருவன் இகழ்வதைப் பொறுத்துக்கொள்வதும் கீழ்த்தரமானதாகும்.

அகதிகளாகவும்- வேலைதேடியும் வெளிநாடு செல்வோர் மதம் மாறுவதென்பது நமக்கெல்லாம் தீராத வசையாகும்.

### இன்று கொடியேறும் சந்நிதி முருகன்

செல்வச்சந்நிதி தன்னில் சேவலங் கொடியே தாங்கி
பல்வகைத் துயரம் தீர்க்கும் பார்வதி மைந்தா கேளாய்
அல்லல்கள் பட்டு நாங்கள் அனுதினம் அமைதி இன்றி
எல்லையில் கவலை கொண்டே ஏங்கியே வாழ்தல் நன்றோ.

கந்தனே! கடம்பா! வள்ளி காந்தனே! கார்த்தி கேயா!
உந்தனை அண்டி நாங்கள் உறுதுணை வேண்டி நின்றோம்
பந்தனை அறுத்து எம்மை பரகதி அடையச் செய்வாய்
வந்தனை செய்தே உன்னை வாழ்த்தியே வரங்கள்
கேட்போம்.

— ஆழ்கடலான்

### வெள்ளிச்சிந்தனை

சைவ ஆலயங்கள்-குருமார்-சமய ஸ்தாபனங்கள் சமயஉண்மைகளை மக்களுக்கு ஊட்டுவதிலும் சமய அபிமானம்-ஒழுக்கம் என்பனவற்றைப் பேணுதல் - ஏற்படுத்தலிலும் அக்கறை காட்டவேண்டும்.

இந்தியாவிலுள்ள ஆலயங்களில்போல வேதாகம பாடசாலைகள், சமயப்பிரசார நிலையங்கள் என்பன இங்குள்ள பிரபலம் வாய்ந்த சைவ ஆலயங்கள் ஒவ்வொன்றையும் அடுத்துத் தோன்றவேண்டும்.

சைவசமயத்தில் சிறப்புகள் பல விளங்கியபோதும் சைவமக்கள் சமய அபிமானம் சமய ஒழுக்கம் அற்றவர்களாய் இருப்பது சைவ சமயத்துக்கே சிறுமை உண்டு பண்ணுவதாயும் உள்ளது.

சைவத்தின் மேற்சமயம்
வேறில்லை
அதிற்சார் சிவமாம்
தெய்வத்தின் மேல் தெய்வம்
இல்லென்னும் நான்
மறைச்
செம்பொருள் வாய்
மைவைத்த சீர்த்
தேவாரமும்
திருவாசகமும்
உய்வைத் தரச்செய்த
நால்வர்
பொற்றாள் எம்முயிர்த்
துணையே
—பழம்பாடல்

—அருளாளன்

# அந்தச் சலநாட்கள்

கே.ஜி.எம்

[6]

ஜனார்த்தனன் இல்லம். தமிழ் நாடு சட்டமன்ற மேலவை உறுப்பினராக விருக்கும் டாக்டர் இரா. ஜனார்த்தனன், உலகத் தமிழ் இளைஞர் பேரவையின் செயலாளராகவும், உலகத் தமிழர் மாமன்றத்தின் துணைத்தலைவராகவும் செயலாற்றுகின்ருர்.

''எங்கள் முன்னுள் கோப்பாய் எம். பி. திரு. சி. கதிரவேலுப்பிள்ளை அவர்கள் பற்றி நீங்கள் ஏதோ குறிப்பிட்டிருந்தீர்களே...'' என்று பேச்சை ஆரம்பித்தேன்.

''உண்மையில் இன்று அவர் உயிருடன் இருந்திருந்தால், இன்றைய 'கால கட்டம்' குறித்து அதிகம் பெருமைப்படக் கூடியவர் அவராகத் தான் இருக்கமுடியும்...'' என்று ஆரம்பித்தஇரா ஜனார்த்தனன்

''நமது குரல் (அதாவது இலங்கைத் தமிழர் மக்களின் குரல்) தமிழ் நாட்டில் ஒலித்தால் மட்டும் போதாது. டில்லியின் 'காது'களுக்கு ஏறவேண்டும்...'' என்று அன்று விரும்பியவர் திரு. கதிரவேலுப்பிள்ளை அவர்கள். இதற்காக அவர் பெரு முயற்சி எடுத்தார். தனிப்பட்டமுறையில் கடசெயல்பட்டார். இந்த ஒரே நோக்கத்திற்காக டில்லி சென்று மத்திய அரசின் கவனத்தை இலங்கைத் தமிழர் பக்கம் திருப்ப விரும்பினர். என்ன செய்வது. இந்தியாவுக்கு வந்ததும் டில்லி செல்லமுன்னரே தமிழ் நாட்டில் அவர் 'ஆவி' பிரிந்து விட்டது....'' என்று வருத்தப்பட்டு 'சிந்தனைச்சிற்பி'யின் பூதவுடலை இலங்கைக்கு அனுப்பிவைக்க தாம் மேற்கொண்ட முயற்சிகளையும் நினைவு கூர்ந்தார் ஜனு.

கச்சதீவு புனித அந்தோனியார் உற்சவ காலத்தில் (நான் சொல்வது அந்தக் காலம்) இலங்கை தமிழ் அரசியல் தலைவர்களும் இந்திய, குறிப்பாக தமிழ் நாட்டு அரசியல் தலைவர்களும் சந்திப்பதற்கு கச்சதீவு ஒரு தளமாக விளங்கியது.

''இரா. ஜனார்த்தனன் கச்சதீவு விஜயம்!... திரு. மணவைத்தம்பி கச்சதீவுக்குத் திடீர் விஜயம்... தமிழ்த்தலைவர்களுடன் நீண்ட நேரம் சந்திப்பு......!''

இவை அன்றையத் தினசரிப் பத்திரிகைகளின் முதல் பக்கத் தலைப்புச் செய்திகள்!

டாக்டர் ஜனார்த்தனன் பற்றிய அன்றைய சிந்தனைகள் இலேசாகப் பளிச்சிடவே...... கூடவே யாழ்நகரில் 1964-ல் நடைபெற்ற நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டின் நிகழ்வுகள் மனதில் நிழலாடின.

ஒருகட்டத்தில் 'ஜனு' சொன்னர்......

''அந்தப் பாதிரியார் மட்டும் அந்த ஆடையைத் தந்திருக்காவிட்டால்...... மானம் கப்பல் ஏறுவது ஒருபுறமிருக்கட்டும்... அன்றையதினமே நானும் பத்துடன் பதினென்ருகியிருப்பேன்......'' என்ருர்

''வீரசிங்கம் மண்டபத்தில் மகாநாடு உச்சக்கட்டத்தில் நடந்து கொண்டிருந்தது. திட்டமிட்டபடி பொலிஸார் தங்களது 'நாடக'த்தை ஆரம்பித்தார்கள் மகாநாட்டுக்கு வந்த மக்கள் நாலாபுறமும் சிதறி ஒடத் தொடங்கினர். நானும் உயிரைக்கையில்பிடித்தேன் மதிலால் ஏறமுயற்சித்த போது யாரோ எனது வேட்டியை இழுத்தனர். திரும்பிப் பார்க்க நேரமில்லை. உள்ளாடையுடன் மட்டும் நின்ற எனக்கு ஒரு பாதிரியார் உடைகளைத் தந்தார். அந்தப்பாதிரியார் உடையில் நான் வெளியேறினேன். உயிர்தப்பினேன்...'' என்று விளக்கமளித்தார்.

''எனக்கும் உங்களுக்கும் உள்ள (அதாவது இலங்கைத் தமிழ் மக்களுக்கு முள்ள) உறவுகள் இன்று நேற்று ஏற்பட்டதல்ல அதஒரு சரித்திரம்! இலங்கைத் தமிழ் மக்களின் இன்னல்களை பல ஆண்டுகளுக்கு முன்னரே அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி மற்றும் மலேசியா போன்ற நாடுகளில் கருத்தரங்குகள், நாடகங்கள், சிறப்புச் சொற்பொழிவுகள் மூலமாக எடுத்து விளக்கி ஆதரவு தேடியவன்

[8-ம் பக்கம் பார்க்க]

## இன்று த. ஆ. சங்கத்தின் இரண்டு கூட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்து ஆரம்ப பாடசாலை மண்டபத்தில் இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கம் இரு கூட்டங்களை இன்று நடத்த இருக்கிறது.

அநுராதபுரம் போன்ற மாவட்டங்களில் இருந்து இடம் பெயர்ந்த ஆசிரியர்கள் ஜூலை மாதத்திலிருந்து தொடர்ச்சியாகச் சம்பளம் பெறுவது தொடர்பாகவும், விஷேட விடுமுறை, இடமாற்றம் தொடர்பாகவும் ஆராய்

[7-ம் பக்கம் பார்க்க]


# லீடா

## முழு ஆடை நிறைந்த பால்

- உலகில் மிகச் சிறந்த பால் பண்ணைகளை கொண்ட ஒல்லாந்திலிருந்து ''லீடா'' கிடைக்கின்றது.
- பசுவினிடமிருந்து வாடிக்கையாளரை சேரும் வரை, கைபடாதது, அசலானது என உத்தரவாதமளிக்கப்படுகின்றது.
- டின்களில் முத்திரையிடப்பட்டு புதிதாகவே கிடைக்கின்றன




விற்பனையாளர்
மில்லர்ஸ் லிமிடெட்

- உடனே கறந்த பசுப்பாலின் ருசி!
- பால் வெண்ணை கூடுதலாக உள்ளது!
- இணையற்ற சக்தி மிக்க பால்!


## தீதும்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

வதைக் கவனிப்போம். இந்தியா அடிமைப்பட்டு, இந்திய மக்கள் பலவித துன்பங்களை அந்நியர் ஆட்சியின்கீழ் அனுபவித்தனர். அதற்கான காரணங்கள் பற்றிக் குறிப்பிடும் போது காந்தியண்ணல் பின்வருமாறு குறிப்பிடுகிருர்.

'தீண்டாமை ஒரு சாபக்கேடு என்றே என்மனதிற்குத் தோன்றுகிறது. அந்தச் சாபக்கேடு நம்மிடம் இருக்கும் வரையில், இந்தப் புனிதபூமியில் நமக்கு நேரும் ஒவ்வொரு துன்பமும், நாம் செய்துவரும் இந்தப் பெரிய, அழிக்கமுடியாத குற்றத்திற்குத் தகுதியான, நியாயமான தண்டனையாகவே இருக்கும்' என்றும், பிறிதோரிடத்தில் காந்தியடிகள், 'கடவுள் நேரடியாகத் தண்டிப்பதில்லை. அவருடைய வழிகள் நம் அறிவுக்கு எட்டாதவை. நாம் அனுபவிக்கும் கஷ்டங்களுக்கெல்லாம் கொடிய பாவமான தீண்டாமை காரணமல்ல என்று யார் கூறமுடியும்?' எனவும் வினவுகின்ருர். இங்ஙனம் யான் காந்தியடிகளின் கருத்தை விரிவாகக் குறிப்பிடுவது நாம் தெளிவாக விடயங்களை உணர்ந்துகொள்ள வேண்டுமென்ற விருப்பம் கருதியே. நம்முடைய பொறுப்புக்களை நாம் உணர்ந்து ஏற்றுக்கொள்ளவேண்டும். அதற்கேற்ப நாம் செயற்படவும் வேண்டும்.

நம் பெருமைக்கும் ஏனைய சிறுமைக்கும் நம்முடைய கருமங்களே, நமது செயல்களே பொறுப்பு என்ற உண்மையை உணர்ந்து கொள்ள வேண்டும். நமது வாழ்விலே விடிவுஏற்பட நமது குறைபாடுகளையும் அவற்றிக்கான காரணங்களையும் தெளிந்து கொள்ளல் வேண்டும். விமோசனத்திற்கான முதற்படி அதுவே. எனவே ஏனையோரின்மேல் பழிகூறி வாளவிருக்கும் பொறுப்பற்ற தன்மையைவிட்டு நீங்குவோம். நம்தோளின் மேலேயே பொறுப்பை ஏற்போம். அதற்கேற்பச் செயடுவோம்.

### உணர்வின் அவசியம்

இந்த உண்மைகள், உயரிய கருத்துக்கள் நமது துயரநிலை காரணமாகத்தான் முக்கியம் பெறுகின்றன என்பதல்ல. தற்போதைய துன்பநிலை அவற்றுக்கு கூடிய அவசரத்தையும் அவசியத்தையும் கொடுக்கின்றன அவற்றின் முக்கியத்துவத்தைகூடிய துலக்கமாகக் காட்டுகின்றன. ஆனால் இந்த விழுமிய கோட்பாடுகள் காலம் கடந்த உண்மைகள் சீரியவாழ்க்கை வாழவிரும்பும் எல்லோருக்கும் எப்போதும் அவசியமானவை ஏனெனில் மனித வாழ்வை யென்பது ஒருபோராட்டம் அது ஒரு குருசேத்திரயுத்தம் தர்மத்திற்கும் அதர்மத்திற்கும் இடையேயுள்ள போர் அந்தத் தேவனின் பக்கம் சார்ந்து சாதிதானை வெல்லவேண்டும். வாழ்க்கை என்பது ஒரு வேள்வி. நமது சிறுமைகளை, நம்மைப் பீடித்திருக்கும் இழிந்த தன்மைகளை நாம் வேள்வித் தீயிலிட்டுப் புடமிடவேண்டும்.

மனித வாழ்வைக்கு சுவை தருவது, அர்த்தம் தருவது உயர்வுக்காகப் போராடும் இத்தகைய முயற்சிகளே. பணவேட்டையும் சுகபோக மோகமும் நம்மை ஏற்கனவே பாழ்படுத்திவருகின்றன. எனவே நம்முடைய தற்போதைய அவலநிலையைப் போக்க ''தீதும் நன்றும்பிறர் தரவாரா' என்பதை உணர்வோம் தெளிவோம் அத்தெளிவின்கண் பிறந்த உறுதியோடு நம் வாழ்க்கையைத் திருத்தியமைக்கும் செயல்களில் ஈடுபடுவோமாக. செயற்பட நாம் தவறின் அல்லது தாமதிப்பின் நம் துன்பங்களும் துயரங்களும் தொடரும்.


## கடைசி நேர விளம்பரம்

### தவறிவிட்டது

மருதனமடத்திற்கும் இணுவில் புகையிரத நிலையத்திற்கும் இடையில் நேற்று காலை 9 மணியளவில் நீல நிறத் துணிப்பை (Bag), ஒரு தொகை பணம், காப்புறுதிப்பத்திரம், சாரதி அனுமதிப் பத்திரம் என்பனவற்றுடன் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் சிக்கோ ஹாட் வேயர்ஸ் தாவடி, அல்லது சிக்கோ ஹாட் வேயர்ஸ் கைதடி என்ற முகவரிக்கு உடன் தொடர்பு கொள்ளவும்: தகுந்த சன்மானம் வழங்கப்படும் 82

ஜேர்மனி, பிரான்ஸ், சுவிஸ், இத்தாலி, ஹொலன்ட்

முதலிய நாடுகளுக்கு குறைவான கட்டணத்துடன்

பாதுகாப்பான பிரயாண ஒழுங்குகள்

கொழும்பிலிருந்து எமது பிரதிநிதி பிரயாணம் பூர்த்தியாகும் வரை உங்களுடன் வந்து எல்லா உதவிகளையும் செய்வார்.

பாஸ்போட், பொன்ட், இந்தியன் விஸா

முதலியனவும் செய்து கொடுக்கப்படும்.

N. தவம்,

# PARIS TRAVELS

100 1/3, Keyzer, Street,
Colombo 11.

சுமங்கலி,
நவீன சந்தை,
சாவகச்சேரி.

முகாமையாளர்,
குமரன் டூரிஸ்ட் இன்,
67. ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23753

எட்வேட் தங்கவடிவேல் ராஜ்குமார்,
யோகநாயகி சினிமா, வல்வெட்டித்துறை.

# இன்றைய பலன்

மாதம்: ஆடி
திகதி: 32 (1985-8-16)
வெள்ளி
திதி: அமவாசை பி. ப. வரை
நக்ஷத்திரம்: ஆயிலியம் பி. ப. வரை

மேடம்: தக்க சமயத்தில் தந்தையின் ஆதரவும் தப்பாமல் கிட்டும். தெய்வ நம்பிக்கை மேலிடும், நினைத்ததை சாதிப்பதில் இன்று முன்னணியில் நிற்பீர்கள்.

இடபம்: கடமையாற்றும் இடத்தில் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். இருப்பிடமாற்றத்திற்கான ஆலோசனையும் உருவாகும்.

மிதுனம்: சகோதர பாசம் தலைதூக்கி நிற்கும், கைத்தொழில் விருத்திக்கும் இடமுண்டு. முதியவர் ஒருவரின் அறிவுரை முன்னேற்றத்தை வளிக்கும்.

கடகம்: குடும்பக் கவலையுடன் குறுக்குவழித் தலையீடும் தென்படும், உங்களைப் பற்றி புனைந்துரைகள் பரப்புவதற்கும் சிலர் முற்படுவார்கள்.

சிங்கம்: இனப்பூசலின் மூலம் இதயபாரம் ஏற்படும், நடுநிலை முடிவுக்கு வருமாறு நிர்ப்பந்திக்கப்படுவீர்கள் எதையும் தாங்கும் இதயத்துடன் செயலாற்றுவீர்கள்.

கன்னி: இதயப்படுதாவில் இன்பக்கூத்து. உற்ற தனால் பயன் இன்று கைமேல் கிடைக்கும். பொருள் வரவுமுண்டு.

துலாம்: மனையில் பூசல்கள் தோன்றி மறையும். தனிமையை விரும்புவீர்கள் நண்பர்களே சூழ்ச்சிவலை விரிப்பார்கள்.

விருச்சிகம்: வாகனம் செலுத்துவோருக்கு நன்மதிப்புக் கிடைக்கும் கல்வித்துறையில் புதிய உற்சாகம் பிறக்கும். சுபதினம்.

தனுசு: வசதிகள் பெருகும் வாழ்க்கையும் வளமாகும், தொழில்துறையில் புதிய வெற்றிகளும் கிடைக்கும்.

மகரம்: ஆயுதபீடைக்கு இடமுண்டு, எதிலும் அவதானம் வேண்டும், அவசரப் போக்கு அனர்த்தங்களுக்கு இடமளிக்கும்.

கும்பம்: களஸ்திரவழியால் மகிழ்ச்சிகரமான சம்பவம் இடம்பெறும், காதலர் வாழ்வில் கனகுஷியான தினம்.

மீனம்: பிரச்சினைகள்மேலும் சிக்கலாகும், உணவு விடயத்தில் பிரியக்குறைவு ஏற்படும் கூர்மையான ஆயுதங்களுடன் பழகாதிருக்கவும்.

திருமலை
— வே. ரவீந்திரன் —

# "உதைபந்தாட்டப் போட்டிகளுக்கு இளம் மத்தியஸ்தர்களை உருவாக்க வேண்டும்"

(யாழ்ப்பாணம்)

"உலகில் தற்போது உதைபந்தாட்டப் போட்டி, பல புதிய விதிமுறைகள் புகுத்தி நடாத்தப்பட்டு வருகின்றது இப் புதியவிதிமுறைகளை எமது புதிய-பழைய மத்தியஸ்தர்களுக்கு அறிமுகப்படுத்தவும், வருங்காலத்தில் உதைபந்தாட்டப் போட்டிகளுக்கு இளம் மத்தியஸ்தர்களை மத்தியஸ்தம் வகிக்கச் செய்யும் நோக்குடனேயே, இவ் மத்தியஸ்தர்கள் வகுப்புகளை நடாத்தவிருக்கின்றோம்."

இவ்வாறு, யாழ்ப்பாண உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத் தலைவர் திரு சற்.சிங்கராயர் கூறினார்.

'யாழ்ப்பாண உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம்' புதிய உதைபந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான பயிற்சி வகுப்புக்களை எதிர்வரும் சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் நடாத்தவிருக்கிறது.

யாழ்ப்பாண உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் இப்பயிற்சி வகுப்புகளை தொடர்ச்சியாக இருமாதங்களுக்கு நடாத்தவிருக்கிறது. ஒவ்வொரு கிழமையும் சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் காலை 9 மணிமுதல் 12 மணி வரை, யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியில் நடைபெறவிருப்பதாகவும், இவ்வகுப்புகளில், புதிய மத்தியஸ்தர்களாக சேரவிரும்புபவர்கள் எதுவித வயதுக் கட்டுப்பாடுமின்றி கலந்து கொள்ளலாம் என்றும், இப்பயிற்சி வகுப்புகளுக்கு, விரிவுரையாளர்களாக இலங்கை உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத் தலைவர் திரு. எம் பேரின்பநாயகம், யாழ் உதைபந்தாட்ட லீக்கின் காரியதரிசியும், சர்வதேச உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்க அங்கத்தவருமான திரு ஈ கே. குமரையா, திரு. எஸ். எம். மாட்டின், திரு. எம். பத்மநாதன் ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

இவ்வகுப்புகளுக்கான சகல ஏற்பாடுகளையும், மேற்படிச் சங்கத்தின் காரியதரிசி திரு. பி. ஆர். தம்பிநாயகம் செய்துள்ளார். (வி)


# றோயல் இன்டஸ்றீஸ் ஸ்தாபனத்தாரின்

★ மகிழ்ச்சியான செய்தி!! ★

பல்லாயிரக்கணக்கான மக்களின் அபிமானத்தைப் பெற்ற றோயல் தயாரிப்புகள், தங்களது பெயரை சிவா இன்டஸ்றீஸ் என இருந்ததை, மக்களின் நலன் கருதி றோயல் இன்டஸ்றீஸ் என மாற்றம் செய்துள்ளோம் என மகிழ்ச்சியுடன் அறிவிக்கின்றோம்.

★ போலிகள் நாட்டில் உலாவுவதால், றோயல் இன்டஸ்றீஸ் உற்பத்திப் பொருட்களே றோயல் தயாரிப்புகள். ★

மக்கள் நினைவில் மங்காப் பெயர் ———— றோயல்! றோயல்! றோயல்! றோயல்!

இல்லத்தரசிகளின் சிறந்த தெரிவு
றோயல்
கஸ்ராட் பவுடர்
சிவா இண்டஸ்ரீஸ்
ஆதமலி பில்டிங்
கொழும்பு - 13.

இல்லத்தரசிகளின் சிறந்த தெரிவு
றோயல்
பேக்கிங் பவுடர்
சிவா இண்டஸ்ரீஸ்
ஆதமலி பில்டிங்
கொழும்பு - 13.

★ றோயல் குளுக்கோஸ் "டீ"
★ றோயல் ஜெலி கிறிஸ்டல்ஸ்
★ றோயல் பேக்கிங் பவுடர் ★




மற்றும் பல

★ றோயல் கஸ்ரட் பவுடர்
★ றோயல் கோப்பி
★ றோயல் நீலம் ★

இல்லத்தரசிகளின் சிறந்த தெரிவு
றோயல்
கோப்பி
சிவா இண்டஸ்ரீஸ்
ஆதமலி பில்டிங்
கொழும்பு - 13.

இல்லத்தரசிகளின் சிறந்த தெரிவு
றோயல்
ஜெலி கிறிஸ்டல்ஸ்
சிவா இண்டஸ்ரீஸ்
ஆதமலி பில்டிங்
கொழும்பு - 13.

# றோயல் இன்டஸ்றீஸ்

22 1/1, ஆதமலி பில்டிங், ஆட்டுப்பட்டித்தெரு, கொழும்பு-13.

கிளை : றோயல் இன்டஸ்றீஸ்—பொன்னப்பா லேன், வண்ணார்பண்ணை வடமேற்கு, ஆனைக்கோட்டை. போன்: 26679



# அறிவித்தல் எமது வாடிக்கையாளர் கவனத்திற்கு

எங்கள் ஸ்தாபனத்தில் விற்பனைப் பிரதிநிதியாக விற்பனை செய்துவந்த கோபால் இராசேந்திரன் என்பவர் ஒரு வருடத்திற்கு முன்பே எமது ஸ்தாபனத்திலிருந்து விலகிவிட்டார். இப்போது எங்கள் ஸ்தாபன பெயரைச் சொல்லிக்கொண்டு, தனது ஸ்தாபன பொருள்களை விற்பனை செய்கிறார் என்பதை அறிந்தோம். அவருக்கும் எங்களுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்பதை எங்கள் அன்பார்ந்த வாடிக்கையாளர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறோம்.

தலைமைக் காரியாலயம் :
றோயல் இன்டஸ்றீஸ்
22 1/1, ஆதமலி பில்டிங்,
ஆட்டுப்பட்டித்தெரு,
கொழும்பு—13.

யாழ். கிளை :
றோயல் இன்டஸ்றீஸ்
பொன்னையா லேன்,
வண்ணார்பண்ணை (வடமேற்கு)
ஆனைக்கோட்டை, யாழ்ப்பாணம்.

★ போலிகளைக் கண்டு ஏமாறாதீர் ★

பாலகன் V.V.
(சாந்தி முன்பாக)
Daily 5 Shows
WAR KILL

ராஜா தியேட்டர்
யாழ்ப்பாணம்
தினசரி 10-30, 2-30, 6-00
சிவகுமார்-நாகேஷ்
தேன் சிந்துதே வானம்
(புதிய பிரதி)

வின்ஸர் (யாழ்.)
Daily 10-30, 2-30, 6-25,
கமலஹாசன்-மாதவி
ராதா-சுலக்சனா-தேங்காய்
டிக்-டிக்-டிக்

ஸ்ரான்லி மினி
5'X5' திரைவானில்
10-30, 12-30, 2-30
4-30, 6-30
RAID ON ENTEBBE
[அதிரடி தாக்குதல்]

லிபேர்ட்டி மினி
10-30, 12-30, 2-30, 4-45
TERROR
இரவு 7-00 மணிக்கு
INTIMATE MOMENTS
Adults Only

மேஃபெயர் மினி சினிமா
(சுன்னாகட்டி காளிகோவில் அருகில்)
10-30, 4-45, 7-00
"Basket Case"
தன் உடலில் ஒட்டிப் பிறந்த ஒரு அரை உருவம் கொண்ட பயங்கர ரகுலாவின் திகில் நிறைந்த கதை

குமரன் மினி சினிமா
10-30, 2-30, 4-30, 6-30
Mosquito Squadren
[War Film]
இராணுவத்துக்கும் இளைஞர்களுக்கும் உள்ள போராட்டத்தைச் சித்தரிக்கும் படம்

வெலிங்டன்
10-30, 2-15, 4-30, 6-45,
இன்று: 14 15
THEATRE OF DEATH
16 முதல்
DRAGON DIES HARD
(புரூஸ்லியின் படம்)
முதல் முறையாக யாழ்ப்பாணத்தில் காட்டப்படுகிறது.

லிடோ சினிமா
10-30, 2-30, 6-30
2-வது மாதமாக ஓடுகிறது!
தியாகராஜன், சிவச்சந்திரன், பூர்ணிமா, ஜெயராம், இலக்சுமிதா, ஜெய்சங்கர் நடித்த
பாலு மகேந்திராவின்
நீங்கள் கேட்டவை
ஈஸ்ட்மன் கலர்

சரவணபவன் மினி சினிமா
(பெருமாள் கோவிலுக்கும் - வெலிங்டன் சந்திக்கும் இடையில்)
4 x 4 திரையில்
10-30, 2-30, 4-30, 7-00
Private-Lessons
(கண்டிப்பாக வயது வந்தோருக்கு மட்டும்)

S.T.L. மினி சினிமா
திருநெல்வேலி
10-30, 2-15, 5-15
சிவாஜி—சாவித்திரி நடித்த
வணங்காமுடி
18 முதல்
மன்னாதி மன்னன்

"லதா" மினி
(கோண்டாவில்)
10-30, 3-30, 6-45
சிரஞ்சீவி- சுஹாதா சுரேஸ்பாபு
மீண்டும் கைதி

உஷா மினி
10-30, 2-30, 4-45, 6-45
Lee Van Cleef...
Code Name Wild Geese
மிக நவீன ஆயுதங்களுடன் 5 கொமாண்டோக்கள் கொண்ட கொரில்லா கோஷ்டி இராணுவ முகாம் மீது தாக்குதல்

மொடேர்ண் மினி சினிமா
ஸ்ரீலங்கா அச்சகவேன் ராஜா தியேட்டருக்கு அருகாமையில்
தினசரி 10-30, 2-30, 4-30 6-45 மட்டும்
The Wild Geese
இன்றைய இளைஞர்களின் தீவிர தாக்குதல் கலை ஒத்த தாக்குதல் நிறைந்த படம்

## நிருவாகிகள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம்-அளவெட்டி மல்லாகம் தெ. ப. பொ. கூ. சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டமும், புதிய நிர்வாக சபைத் தெரிவும் சங்கத் தலைவர் திரு செ. முருகேசு தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

பின்வருவோர் நடப்புவருட இயக்குநர்களாக ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டனர்.

திரு. செ. முருகேசு (தலைவர்), திரு. மா. மாணிக்கம் (உபதலைவர்), திரு. க. சிவலிங்கம் (செயலாளர்), திருவாளர்கள்: மா ஐயாத்துரை, தே. மதுரநாயகம், மு வெள்ளிவேல், யோ. ஞானமுத்து, இ. ஆசை, சி. சிவலிங்கநாதன் ஆகியோர் இயக்குனர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

## துர்க்கை அம்பாள்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

அங்கபிரதட்சணம் அடி அழித்தல் காவடி முதலான நேர்த்திகள் வெளி வீதியிலே இடம்பெறும்.

உற்சவதினங்களில் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்படும்.

நியூ சினிமாலயா
10-30, 2-30, 4-30 6-30
The Wild Geese
இராணுவ முகாம்களின் திகிலூட்டும் திடீர் தாக்குதல்கள் கொண்ட சித்திரம்
Adults Only

நியூ சாந்தி மினி
10-30, 2-30, 4-30, 6-30
Pending Grievences
[JUNGLE WOMEN]
இளம் பெண்களைக் கொன்று தின்னும் கொடூரம்! மற்றொரு கொடூரம்!!- இப்படம் இலங்கைக் காடுகளில் படமாக்கப்பட்டதாம்!
Adults only

## அம்பிகையின் அருள்பெற்றவர்



கோண்டாவில் கணபதிச் சாமியாரின் சிராத்ததினம் இன்று வெள்ளிக்கிழமை அவருடைய ஆலயத்தில் கொண்டாடப்பட இருக்கிறது.

கோண்டாவில் மேற்குகந்தர் வளவுப் பிள்ளையார் (காளி கோயில்) ஆலயத்தின் தெற்குப் பகுதியிலிருந்து உரத்த குரலில் பாடல்கள் தங்குதடையின்றி ஒலிப்பதென்றால் அந்தப் பாடல்களைப் பாடுபவர் கணபதிச் சாமியார்தான் என்பது அந்த ஊர்மக்களுக்குத் தெரியும். அம்பிகையை ஒரு சிறு குடிசையிலே எழுந்தருளச் செய்து அவள் புகழ் பாடுவது தான் என்பணி அவளின் பிள்ளைகளின் துயர் துடைப்பது தான் என்பிறவியின் நோக்கம் என்று வாழ்ந்து காட்டியவர் அப்பெரியார்.

இளம் வயதில் கொக்குவில் நடராஜா வைத்தியரிடம் சேவகம் புரிந்த இவரை அந்த அருட்சக்தி ஆட்கொண்டது. காலப் போக்கில் தன்னுடைய துடுக்குத் தனங்கள் சுட்டெரிக்கப்பட்டு புடம்போட்ட தங்கமாக ஒரு சிடனுக்குரிய பண்புகளுடன் வெளிவந்தார். நல்ல ஒரு தொண்டன் கிடைத்து விட்டான் என்று மனமகிழ்ந்த காளிதேவி, அவரை தன்னுடைய ஆலயத்துக்கு அருகில் வைத்துக்கொண்டாள்.

ஒரு சிறிய குடிசையிலிருந்த தேவியை இன்று பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் வணங்கி மகிழவைத்த பெருமை அவரையேசார்ந்தது. அம்பிகையை அருகிலிருந்து இருபத்தி நான்கு மணிநேரமும் மகிழ வேண்டுமென்ற ஆசையில் தன்னுடைய வீட்டோடு ஒருசிறிய குடிசைஅமைத்து அதில் அம்பிகையை இருத்தி மனமகிழ்ந்தார்.

அவருடைய திருக்கரங்களிலுல் விபூதி பெற்று சுகம்பெற நினைக்கும் அடியவர்கள் அவருடைய குடிசையை நோக்கி நாள்தோறும் வருபவர்கள் தன்னுடைய வைத்தியஅனுபவத்தை கொண்டு மக்களின் நோய்களை இலவசமாக குணப்படுத்துவார். அவர்கள் விரும்பிக்கொடுக்கும் பணத்தை அம்பிகையின் வழிபாட்டிற்காக செலவழிப்பார்.

மகான்கள் மறைந்த பின்னரும் அருள் பாலிக்கும் அற்புதங்கள் நடந்துகொண்டுதான் இருக்கின்றன. கணபதிச் சாமியாரின் மௌன மொழி கேட்டுக்கொண்டேதான் இருக்கும் அவருடைய சிராத்த தினத்தில் கலந்துகொண்டு அவரின் அருளுக்கு பாத்திரமாவோம்.

— கந். தர்மலிங்கம்

## இன்று

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

வதற்காக ஒரு கூட்டம் காலை 9 மணிக்கு. நடைபெறும். இக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு இடப்பெயர்ந்த அனைத்து ஆசிரியர்களும் அழைக்கப்படுகின்றனர்.

இக் கூட்டத்தில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த. மகாசிவம் இடம் பெயர்ந்த ஊழியர்களின் இணைப்புக் குழுச் செயலாளர் ஐ. தி. சம்பந்தன் ஆகியோர் உரையாற்றுவார்கள்

சங்கீத, நடன ஆசிரியர்களின் கூட்டமொன்று இன்று காலை 11 மணிக்கு இதே மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இக் கூட்டத்தில்கலந்து கொள்ளுமாறு சங்கீத, நடன ஆசிரியர்கள் அனைவரும் அழைக்கப்படுகிறார்கள்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சங்கீத/நடன டிப்ளோமாப்பட்டம் பெற்றவர்களுக்குப் பட்டதாரிச்சம்பளம் பெற்றுக் கொடுத்தது போல ஏனைய சங்கீத/நடன ஆசிரியர்களுக்கும் பட்டதாரிச் சம்பளம் பெற்றுக் கொடுப்பது தொடர்பாக ஆராய்வதற்காக இக் கூட்டம் கூட்டப்படுகிறதென்று தெரிவித்த இ. த. ஆ. சங்கப் பொதுச் செயலாளர் திரு மகாசிவம் புதிய சம்பளத்திட்டத்துக்கமைய பட்டதாரிச் சம்பளம பெறாத யாழ் பல்கலைக்கழக டிப்ளோமா பட்டம் பெற்றவர்களையும் இக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுத்துள்ளார். (ச)

உ
சிவமயம்

வீட்டுக்கிருத்திய அழைப்பு

திரு. செல்லத்துரை சிவஞானசுந்தரம்பிள்ளை
[அனுராதபுரம் நியூ விஜேந்திரா படமாளிகை உரிமையாளர்]

அன்னை மடியில்: 23-3-1925
இறைவன் அடியில்: 18-7-1985



அன்புடையீர்!
18-7-1985இல் சிவபதமடைந்த எனதன்பு கணவரும், எமதன்பு தந்தையாரும் ஆகிய திரு செல்லத்துரை சிவஞானசுந்தரம் பிள்ளை அவர்களின் வீட்டுக் கிருத்திய கிரியைகள் 17-8-1985 சனிக்கிழமை மு. ப. 10-00 மணியளவில் ஐயனார் கோவில் வீதி சுன்னாகத்தில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பத்தினரும் வருகை தந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

— வணக்கம் —

இங்ஙனம்
சி. திருப்பதிஅம்மாள், (மனைவி)
மகன்மார், மகள். மருமகன், மருமகள்மார். குடும்பத்தினர்.

"வசந்த மாளிகை"
ஐயனார் கோவில் வீதி,
சுன்னாகம்.

72


சுவாமி இராமகிருஷ்ண பரமஹம்சர்
நினைவு தினம் இன்று



உங்கள் அபிமானத்துக்குரிய
மில்க்வைற் நீல சோப்
தற்பொழுது கூடிய நிறையுடன் புதிய முறையில் மெருகூட்டப்பெற்று எங்கும் விற்பனையாகிறது.
புதிய விலை ரூ. 2-20 சதம் மட்டுமே.
10 மேலுறைகளை அனுப்பி அழகிய இராமகிருஷ்ண பரமஹம்சர் ஸ்ரிக்கர் ஒன்றைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க்வைற், யாழ்ப்பாணம்.

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY




வவனியா சம்பவங்களின் போது; பஸ் நிலையம் எரிந்த நிலையில் காணப்படுவதை முதல் படத்திலும், மூனாந்திரம் வீதியில் உள்ள அரிசி ஆலை ஒன்று எரிந்த நிலையில் காணப்படுவதை இரண்டாவது படத்திலும் காணலாம். (படங்கள் நமது நிருபர் ரி விவேகராசா)

### இடமாற்றம்பெற்ற

## 86 தமிழ் பொலிஸார் புதிய இடம் செல்லவில்லை

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்திலிருந்து இடமாற்றம் பெற்ற 86 தமிழ் பொலிஸாரும் புதிய இடங்களுக்குத் நேற்றுச் செல்லவில்லை.

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திற்கும் அவர்கள் நேற்றுச் செல்லவில்லை என்று கூறப்படுகிறது.

இவர்கள் தங்கள் இடமாற்றத்தைப் பரிசீலனை செய்யுமாறு மேலிடத்தைக் கோரியுள்ளனராம்.

## நிறை குறைந்த பாண் தயாரித்தவர் பிடிபட்டார்

(சுண்டுக்குளி)
அண்மையில் ஊர்காவற்றுறைப் பகுதியில் உள்ள பேக்கரிகள் மீது அதிகாலையில் திடீர் சோதனைகளை மேற்கொண்ட யாழ் உள்நாட்டு வியாபார திணைக்களத்தினர் ஒரு பேக்கரி உரிமையாளர் 450 கிராம் எடை இருக்க வேண்டிய பாணை 399 கிராம் எடையில் தயாரித்து 3 ரூபாவிற்கு விற்பனை செய்ததை கண்டு பிடித்துள்ளனர்.

இப் பேக்கரி சொந்தக்காரர் மீது நீதிமன்ற மூலம் வழக்குத் தொடரப்படவுள்ளது.

இத் திடீர் பரிசோதனையை யாழ் உள்நாட்டு வியாபார திணைக்கள பொறுப்பதிகாரி திரு க. இரத்தினம் தலைமையில் சென்ற பரிசோதகர்களான திரு கே. கனகசபை, வி. சிவானந்தம். ரி. சிவேஸ்வரத்தம்பி, எம். கே. தவரத்தினம். ரி. பாலசுந்தரம் ஆகியோர் மேற்கொண்டனர்.

## இவர்களுக்கு மீண்டும் குடியுரிமை

(கொழும்பு)
கொழும்பு முன்னாள் மேயர் ஜனாப் எச். எம். பௌஸி உட்பட 34 பேர் இவ்வாரம் மீண்டும் குடியுரிமை பெறுகிறார்கள்.

அதிகாரத்தைதுஷ்பிரயோகம் செய்தனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் 1978 ஆகஸ்ட் மாதம் 11-ம் திகதி இவர்களின் குடியுரிமை நீக்கப்பட்டது தெரிந்ததே.

இவர்களது குடியுரிமை நீக்கப்பட்ட கால எல்லை இந்த வாரம்முடிவுறுகிறது. அதனால் அவர்கள்இழந்தகுடியுரிமையை மீண்டும் பெறுவர்.

கடந்த ஏழு வருடகாலத்தில் இவர்கள் தேர்தலில் போட்டியிடவோ, வாக்களிக்கவோ, நீதிமன்றங்களில் சமூகமளிக்கவோ அரசாங்க மற்றும் உள்ளூராட்சி மன்றங்களில் பதவி வகிக்கவோ தடைசெய்யப் பட்டிருந்தது இவர்களில் சிலர் ஏற்கனவே இறந்துவிட்டனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ச)

## ஒபரேய் தேவனுக்கு பரவலாக அஞ்சலி

(கல்வியங்காடு)
மறைந்த தமிழ் ஈழ விடுதலை இராணுவத்தின் (ரெலா) தலைவரான ஒபரேய் தேவனின் இரண்டாவது நினைவு தினம் நேற்றுமுன்தினம் பல இடங்களிலும் அனுஷ்டிக்கப்பட்டது.

திருநெல்வேலிச்சந்தி முழுவதும் தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டு இராணுவ உடையிலான ஒபரோய் தேவனின் வண்ணப்படம் ஒன்றும் கட்டப்பட்டிருந்தது. அவரின் நினைவாக யாழ் நகரில் காலை 10 மணியளவில் பாரிய சத்தத்துடன் குண்டொன்றும் வெடிக்கவைக்கப்பட்டது.

ஒபரோய் தேவனின் நினைவு தினத்தையொட்டி ரெலா இயக்கம் துண்டுப்பிரசுரங்களை பரந்தளவில் நகரமெங்கும் வெளியிட்டதுடன் யாழ். நகரமெங்கும் ஒட்டப்பட்டும் இருந்தது.

"மக்களே சக போராளிகளை கடத்தி கொலைசெய்வதை தடுத்து நிறுத்தி நீதி வழங்குங்கள்" எனக்கோரும் பெரிய சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன ஒபரோய் தேவனின் 2ம் ஆண்டு நினைவஞ்சலியுடன் பாண்டியன்குளத்தில் பலியான எட்டுப் போராளிகளது 90வது நாள் நினைவஞ்சலியும் இந்த சுவரொட்டிகளில் காணப்படுகின்றன.

### வங்கி...

[1ம் பக்கத் தொடர்ச்சி]
பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு விசாரணையின் பின்னர் கொழும்பு நீதவான் முன்னிலையில் ஆஜர் செய்ய பட்டனர். நீதவான் அவர்களை றிமாண்டில் வைக்க உத்தரவிட்டார்.

இன்று பிற்பகல் மூன்று மணிக்கு நடைபெறவிருக்கும் வங்கி ஊழியர் வெளிநடப்புத் தொடர்பாக கொழும்பில் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளது. [பெ]

### தபாலட்டைத்தகவல்...

(8-ம்பக்கத் தொடர்ச்சி)
வை. இராஜசுந்தரத்தின் கையொப்பத்துடன் ஒருதபால் அட்டை, அவரது மனைவிக்குக் கிடைத்துள்ளது.

நேற்றுமுன்தினம் கிடைத்துள்ள இக்கடிதத்தில் "நான் பதினேழாம் திகதி வருவேன். பிள்ளைகளுக்கு அறிவிக்கவேண்டாம்" என்று எழுதப்பட்டிருக்கிறது

கடந்த 7ம் தேதி கடத்தப்பட்ட திரு இராஜசுந்தரத்தை எவ்வித நிபந்தனையுமின்றி விடுதலை செய்யக்கோரி, பொதுமக்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலம், சத்தியாக்கிரகம், கூட்டுப் பிரார்த்தனை நடாத்திவருகிறார்கள் அவர் கடத்தப்பட்டு ஒரு வாரத்தின் பின்னர் இந்த கடிதம் மனைவிக்குக் கிடைத்துள்ளது (க)

## மினி சினிமாவில் 'கிசுகிசு' வீடியோ டெக் பறிமுதல்!

(யாழ்ப்பாணம்)
ஆபாசப்படத்தை மினி சினிமாவில் தொடர்ந்து காட்டியதற்காக யாழ் நகரிலுள்ள மினி சினிமா ஒன்றில் நேற்று 'வீடியோ டெக்' பறிமுதல செய்யப்பட்டது!

மாணவர் இளைஞர் பொது மன்றத்தினர் ஆபாசப்படங்களை முற்றாக தடைசெய்யும் நோக்குடன இதனைச் செய்தனர்.

இதே மினிசினிமாவில் முன்னர் ஆபாசப்படம் காட்டப்பட்டபோது வீடியோ படப்பிரதிகள் எரிக்கப்பட்டன

ஆபாசப்படங்களை காண்பிக்கும் சகல மினிசினிமா உரிமையாளர்களுக்கு வீடியோடெக்' பறிமுதல் ஒரு எச்சரிக்கையாகும் என்று மன்றத்தினர் தெரிவித்தனர். (க)

### அடகுவைத்தவர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
வர் கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய முன்வந்தால், அவ்வழக்கு தொடர்பான சகல நடவடிக்கைகளையும் எடுக்கத்தயாராக இருப்பதாக யாழ் பிரஜைகள் குழு செயலாளர் திரு ஆர் பாலசுப்பிரமணியம் தெரிவித்துள்ளார். (க)

# ரூபவாஹினி

மாலை

5-00 செய்திகள்
5-05 கார்ட்டூன்
6-00 வேல்விழா (தமிழ்)
6-30 செய்திகள் (தமிழ்)
6-55 பொது அறிவு நிகழ்ச்சி (சிங்களம்)
7-25 கலாசார நிகழ்ச்சி
8-00 செய்திகள் (சிங்களம்)
8-30 இசை நிகழ்ச்சி (ஆங்கிலம்)
9-00 செய்திகள் (ஆங்கிலம்)
9-20 இசை நிகழ்ச்சி
9-45 வார இறுதித் திரைப் படம் "Death Flight" (ஆங்கிலம்)
12-25 ஒளிபரப்பு முடிவு

## வீடு கட்ட கடன் உதவி

(யாழ்ப்பாணம்)
புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் அமைந்துள்ள புளியங்குளம் படித்த பெண்கள் குடியேற்றத்திட்டத்தில் விசேட திட்டத்தின் கீழ ஏழு குடும்பங்களுக்கு தலா 7,500 வீதம் வீடுகட்டுவதற்கும் மலசல கூடம் அமைத்தலுக்கும் என கடன் வழங்கப்பட்டுள்ளது. (ச)

## ஆலய உண்டியல் உடைக்கப்பட்டது

[யாழ்ப்பாணம்]
கோண்டாவில் - கிழக்கு ஸ்ரீ வல்புரநாதர் ஆலய உண்டியல் உடைத்துக் களவாடப்பட்டுள்ளது!

இந்த உண்டியல் மறுநாட் காலை ஒரு பற்றைக்குள்ளிருந்து மீட்கப்பட்டது.

### அந்தச்...

(5 ம் பக்கத் தொடர்ச்சி)
நான் இன்றும் என்னால்முடிந்த உதவிகளைச் செய்து கொண்டு தான் இருக்கின்றேன்..." என்று கூறிய அவர், தந்தை செல்வா மீது உங்களுக்கு எதனை பற்று இருக்கிறதோ அந்த அளவுக்கு அவரை உயிராக மதிப்பவன்நான்; தந்தை செல்வாவுடன் ஒருநாள் உரையாடிக் கொண்டிருந்த போது, கச்சதீவு பற்றியகதை வந்தது அப்பொழுது தந்தை என்ன சொன்னார் தெரியுமா?

"கச்சதீவு பற்றி அதிகம் வருத்தப்படாதீர்கள்... கச்சதீவு நாளைய தமிழீழத்தில் தான் இருக்கப் போகிறது..." என்றார் ... எத்தனை தீர்க்கதரிசனம்...!'

[நாளை வரும்]

## அச்சுக்கூட உபகரணங்கள் முற்றுகக் கொள்ளை!

(யாழ்ப்பாணம்)
யாழ் நகரிலுள்ள அச்சுக்கூடம் ஒன்றில் உபகரணங்கள் யாவும் இனந்தெரியாதவர்களினால் நேற்று முன்தினமிரவு கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை வீதியிலுள்ள இந்த அச்சகத்திற்கு இரவு 11 மணியளவில் லொறியொன்றில் வந்த சுமார் 25 பேர் கதவை உடைத்து உள்ளே சென்று இக்கொள்ளையை நடத்தினர்.

அங்கு இருந்த பாதுகாப்பு உத்தியோகத்தரை பின்அறையில் இருக்குமாறு எச்சரித்து விட்டு சகல அறைக்கதவுகளையும், உடைத்து உட்சென்று தளபாடங்கள். யந்திரங்கள், அச்சகங்கள். மற்றும் உபகரணங்கள் யாவற்றையும், லொறியில் ஏற்றிச் சென்றுள்ளனர்.

அதிகாலை 5 மணிவரை இவர்கள் அங்கு நின்று எல்லாவற்றையும். லொறியில் ஏற்றியதாகவும் இயந்திரமொன்றை ஏற்ற முடியாததினால், அச்சகவாசலில் விட்டு சென்றுள்ளார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

நடு அறையில் ஒரு இயந்திரத்தைதவிர மற்றும் அங்கிருந்த சகல பொருள்களையும் கொள்ளையடித்து சென்றுள்ளனர். அறைச்சுவர்கள் இடிக்கப்பட்டிருந்தன.

பின்பக்கத்தில் உள்ள எல்லை வேலி அப்படியே 'வேரோடு' பிடுங்கி வைக்கப்பட்டுள்ளது.

### திருமலை..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
வாகனங்களின் சாரதிகள் தங்களது வாகனங்கள் தமிழ்த்தீவிரவாதிகளினால் கடத்திச் செல்லப்படும் என்ற காரணத்தினால், வாகனத்தைச் செலுத்த அவர்கள் மறுத்துள்ளார்கள் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. [●]

### திம்பு..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
ந்து. திம்பு விரைந்துள்ள இந்திய வெளியுறவுச் செயலாளர் திரு ரொமேஷ் பண்டாரி, தமிழர் பிரதிநிதிகளையும், அரசதரப்பினரையும் நேற்று சந்தித்து நீண்டநேரம் ஆலோசனை நடத்தினார்.

இதேவேளை; இருதரப்பினரும் தங்களுக்குள் தனித்தனியாக கலந்தாலோசனை நடத்தி வருவதுடன் அடுத்தபடியாக என்ன நடவடிக்கை எடுப்பது என்பது குறித்தும் பரிசீலித்து வருவதாக அறிவிக்கப்பட்டது.

நிலைமை இவ்வாறிருக்க, நேற்று இருதரப்பினருக்கும் இடையே பேச்சுவார்த்தை எதுவும் நடைபெறவில்லை. இன்று தொடரலாம் என்று என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## மருந்துகள் வந்தன

(யாழ்ப்பாணம்)
சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலைக்குத் தேவையான மருந்து வகைகள் கொழும்பில் இருந்து வந்து சேர்ந்தன கடந்த பல மாதங்களாக இவ் வைத்தியசாலைக்குச் செல்லும் நோயாளிகள் மருந்துகள் இல்லாமையால் பெருங் கஷ்டங்களுக்குள்ளாகியிருந்தனர். தற்போது மருந்துகள் வந்ததைத் தொடர்ந்து நோயாளிகள் மருந்துத்தட்டுப்பாடு ஓரளவு நீங்கியுள்ளது. (ச)

## அமைச்சர் 'இராசு' நாடு திரும்பினர்

(கல்வியங்காடு)
தமிழ்நாடு சென்றிருந்த பிரதேச அபிவிருத்தி அமைச்சர் திரு. செ. இராசதுரை நாடு திரும்பினார்.

### முல்கிரிகல..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
இதற்கான வேட்புமனுக்கள் நேற்று ஏற்றுக்கொள்ளப்பட்டன மொத்தமாக எட்டுப் பேர் போட்டியிடும் இத்தேர்தலில் ஆறுபேர் சுயேச்சையாளர்கள் ஐக்கிய தேசியக் கட்சியும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் போட்டியிடுகின்றன. [ரா]

### மக்கள் வங்கி ..

(1-ம் பக்கம் பார்க்க)
அட்டைகளுடன் அமர்ந்து மறியல் செய்தனர்.

வங்கி உத்தியோகத்தர்கள் அவ்விடத்திற்கு வந்தபோதும், வங்கிகள் திறக்கப்படவில்லை.

யாழ்ப்பாணத்தில் மக்கள் வங்கிக் கிளைகளில் அடகுவைத்தோரில் சுமார் 5000 பேர் நேற்றுவரை தங்கள் பெயர் விபரங்களை அடகுவைத்தோர் சங்க பிரதிநிதிகளிடம் பதிவு செய்துள்ளனர்

இதுவரை தங்கள் பெயர் விபரங்களைப் பதிவுசெய்யாதவர்கள் இன்று மக்கள் வங்கிக் கிளைகள் முன் சங்கப் பிரதிநிதிகளிடம் பதிவு செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் இவன்கோவில் மேற்கு வீதி. 6ம் இலக்க அச்சகத்தில் 1985-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 16-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka. under number B 100236/81 Eelanadu P. Box 49, Telegram Eelanadu, Telephone: 22389 ,24126.